உ
சிவமயம்

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] காலயுக்தி௵ மார்கழி௴ [பகுதி உ
Vol. XVII. December—January, 1919. No. 2.

## முப்பொருளாராய்ச்சி.

காண்டல், கருதல், உரையாதிய அளவைகளாலும், மனமாதிய அந்தக்கரணங்களாலும், பிறவற்றாலும், எவ்வகைத்தாலும் உள்பொருளெனத் தெள்ளிதிற்றெளிய எட்டியும் எட்டாமன் மறைந்தும் இடந்தொறு மீண்டிய பொருள்களை எல்லாம் இனமுறைநிரைத்துத் தொகுத்து வகுப்பின் அவையனைத்தும் பதி, பசு, பாசம் எனும் முப்பெரும் பிரிவுகளிலடங்குமென் றறிஞர்கூறுப.

இல்பொருள் யாண்டும்இல்பொருளேயாம்; உள்பொருள் கால தேசங்கட்கிசைய நிலைமாறித் தோன்றிமறைந்து விகாரமெய்தினும் எஞ்ஞான்றும் உள்பொருளேயாகலின் சொல்லிய பதி, பசு, பாச மாகிய மூன்றும் ஆதியுமந்தமுமில்லா நித்தியப்பொருள்களாமென்க. அவை அங்ஙனமாயினும் தம்முள் ஒத்தபடித்தன்மையும் ஆற்றலுமின்றி ஒன்றற் கொன்று வேற்றியல் புடைத்தாம்.

இப்பெரும் பெற்றிய முப்பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளை விரித்துப்பேசும் நூல்கள் யாவையெனில், அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு அவர்கண்மீதுவைத்த பெருங்கருணையினால் சதாசிவமூர்த்தியாய் எழுந்தருளித் தற்புருடம் முதலிய நான்கு முகங்களினால் தோற்றுவித்த இருக்காதி நான்குவேதங்களும், ஈசானமுகமாகிய உச்சிமுகத்தினால்தோற்றுவித்த காமிகமுதல் வாதுளமீறாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும், இப்மூலவாகமங்கள்வழித்தோன்றிய

இருநூற்றேழு உபாகமங்களும், வேதத்தின் ஞானகாண்டத்தை விரிக்கும் ஈசாவாசியம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், ஐதரேயம், தைத்திரீயம், சாந்தோக்கியம், ஆதிய உபநிடதங்களும், வேதாகமங்களின் சாரத்தை ஒருங்குதிரட்டித் திருஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர் நால்வராலும் அருளிச்செய்யப்பட்ட தேவார திருவாசகங்களாகிய தமிழ்வேதங்களும், வேதாகமங்களினும் தேவார திருவாசகங்களினும் சாரத்தின் சாரமாய் ஆகமங்களின் முரணறுத் தொற்றுமைகாட்டற்கெழுந்த இரௌரவாகமத்து 73-வது பாவவிமோசனபடலம் எனப்படும் ஞானபாதத்தாகிய பன்னிருசூத்திரமுடையதும் சிவபெருமானால் நந்தியந்தேவர்க்கும், அவரால் சனற்குமாரமுனிவர்க்கும், அவரால் சத்தியஞானதரிசனிகளுக்கும், அவரால் பரஞ்சோதிமுனிவர்க்கும் முறையே அருளப்பட்டதும், பரஞ்சோதிமுனிவர் ஆஞ்ஞைப்படி வடமொழியினின்று தமிழ்மொழிக்குச் சுவேதவனப்பெருமாள் என்னும்பிள்ளைத்திருநாமமுடைய மெய்கண்டதேவரால் மொழிபெயர்க்கப்பட்டதுமாகிய * சிவஞான போதமும் அதன்வழிப்பிறந்த சிவஞானசித்திமுதலிய பதின்மூன்று சைவசித்தாந்த சாத்திரங்களும் பிறவுமாமென்க.

வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப்பொருள்படும்; ஆகவே பதிபசுபாச மென்னும் முப்பொருள்களையும் அறிதற்குக் கருவியாயுள்ளது என்பது கருத்து. ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். அன்றியும் ஆ என்பது பாசமெனவும் க என்பது பசுஎனவும் ம என்பது பதிஎனவும் பொருள்படுமென்றும், ஆ என்பது சிவஞானமெனவும், க என்பது மோக்ஷமெனவும், ம என்பது மலநாசமெனவும் பொருள்படுமென்றும் ஆன்றோர் கூறுவர். வேதத்துக் கன்மகாண்டம் பதிபசுபாசவியலைச்சுருக்கியும் ஞானகாண்டம் விரித்துங் கூறும்.

இப்பெருந்துணைய நூற்பரப்பனைத்தும் எடுத்தோதிப்போந்தவற்றுள் சிறுச்சிறுபாகங்கள்மாத்திரமே சாமானிய அறிவுடையார்க்கு

---

* 1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபாவிருபஃது, 6. உண்மைவிளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13. உண்மைநெறிவிளக்கம், 14. சங்கற்பநிராகரணம்.

ஒருவாறு புலப்பட ஏனையபாகங்கள் மிகமய்க்கி மலேவுசெய்யாநிற்கும். உயிரினும் விழுமியதாயோம்பற்குரிய நல்லொழுக்கம்பூண்ட நன் மாணுக்கர் நல்லாசிரியரை முலறப்படியடைந்து தொண்டுபூண் டொழு கிச் சோபானமுறையிற் பலநூல்களேயுஞ் செவ்விதின் ஆராய்ந்து அறி வைப்பெருக்கிப் பக்குவராயபின்னரே பதிபசுபாச ஞானநூல்களைக் கேட்டற்குரியராவர். கல்வியின்றிப் பக்குவராதலோ இயலாது.

இந்நிலவுலகின்கண்ணே செறிந்துள்ள உயிர்வருக்கங்களுள் ஐம் புலவுணர்வோடு நன்மை தீமைகளைப் பகுத்துணரவல்ல மனவுணர்ச்சியு முடையராய் முதன்மைபெறு மக்கள் நன்குறுதற்கு வேண்டப்படுஞ் சவிகற்பஞானத்தைப்பயக்கும் வியஞ்சகஞானகாரணமாய் விளங்கு வது கல்வியாம். மக்கள் தமக்கு இயற்கையாயுள்ள மனக்கருவியினுல் நிருவிகற்பஞானச்செய்தியும், செயற்கையான கல்வியறிவினுல் சவி கற்பஞானச்செய்தியு மெய்துகின்றூர். நிருவிகற்பக்காட்சியாவது பெயர், சாதி, குணம், கன்மம், பொருளென்றிவற்றுற் பகுத்தறித லின்றி இஃதொன்று தோன்றுநின்றதெனப் பொருளுண்மைமாத் திரையே அறியும் ஞானசத்தி. சவிகற்பக்காட்சியாவது, பெயர் சாதி முதலியவற்றுற் பொருளையுள்ளவாறுணரு ஞானசத்தி. இச்சத்தியை அபிவிர்த்தியாக்கி, உடலுடனழியுஞ் சாதிமுதலியன போன்றழியாமல், உயிருடன்செல்லுந்தாத்தினதாகிய கல்வியின் மாட்சியை,

“இம்மை பயக்குமா லீயக் குறைவின்றல்
தம்மை விளக்குமால் தாமுணராக் கேடின்றல்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.”

“அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லேச்
சிற்றுயிர்க் குற்ற துணே.”

என்றின்னபல ஆன்றேர் கூறியவற்றுனு முணர்க.

நன்மாணுக்கர் இயல்புகூறின், ஆசிரியன் கற்பிக்குநூற்பொரு ளைக் கற்பித்தவாறுணர்தலும், கற்பித்தபொருள் பற்றுகக்கொண்டு சூழ்ந்து வேறு நற்பொருளுணர்தலும், தம்போலக்கற்பவர்க் குபகாரிக

ளாதலும், தந்தைதாய் ஆசிரியர் முதலியோர் செய்நன்றியறிதலும், தீயசிற்றினச் சார்பின்மையும், சோம்பு, தடுமாற்றம், மானம், மறவி, கடுநோய், வெகுளி, களவு, காமம் என்றிவை யிலராதலும், ஆசிரியனை யடைந்து வழிபடுதலும், தருமநெறி தவறாமையும், ஆசிரியன் குறிப்பறிந்து நடத்தலும், கேட்டநூற்பொருளைச் சிந்தித்தலும், பாடத்தை மறவாமற்காத்தலும், மீட்டு மாசிரியனையடைந்து கேட்டநூற்பொருளை ஐயவிபரீதங்கள் நீங்க வினவுதலும், நூற்பயிற்சியுடையார் பிறர் அறிந்தாதல் அறியாதாதல் ஐயமுற்றாதல் வினவுஞ் சொற்பொருள்வினாக்களுக்கு அவர் கொள்ளுமுறையான் விடையிறுத்தலும், நூற்பொருள்களைக் கற்றோரவையில் அவரனுமதிகொண்டெடுத்துப் பிரசங்கித்தலுமுடையராகி உலகநடையறிந்தொழுகுவோர் நூல்கற்றற்குரிய நன்மாணாக்கராவர்.

நல்லாசிரியர் யாவரெனில், உயர்குடிப்பிறப்பும், மனத்தூய்மையும், நல்லொழுக்கமும், பலகலைப்பயிற்சியும், வாய்மையும், மாணாக்கர் மாட்டன்புடைமையும், பொருளவாவின்மையும், நடுவுநிலைமையுமென்னு மெண்வகை யிலக்கணங்களுடையராய்க், கொடையும், ஊக்கமும், உலகியலறிவும், நிலைபெற்றதோற்றமும், பொறையும், நிறையும், மறப்பின்மையும், அறிவும், உருநலனும், ஆற்றலும், புகழும், சொல்வன்மையும், மாணாக்கரால்விரும்பப்படுசீர்மையும் தொன்னெறியாற் பொருந்தினோர் கற்பிக்கும் நல்லாசிரியராதற்குரியரென்றறிக.

நல்லாசிரியரைக்கண்டடைந்து விதிப்படி வித்தியாரம்பஞ்செய்து தண்டமிழ்க்கலைகளைக் கற்கப்புகு நன்மாணாக்கர் முன்னர்த் தமிழ் நெடுங்கணக்கோதி எழுத்திணைத்துச் சொல்லாக்கவும் சொற்றொடுத்து வாசிக்கவும் பயின்றபின்னர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், மூதுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதி நூல்களைக் கிரமமாகக்கற்றுப் பொருளுணர்ந்துகொள்ளவேண்டும். அதன்பின்னர் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலிய நிகண்டுகளைக்கற்று அவைகூறுஞ் சொற்பொருளுணர்ந்து, நாலடி, ஆசாரக்கோவை, முதுமொழி வெண்பா, நீதிநெறிவிளக்கம் ஆதிய நீதிநூல்களைக்கற்று அவற்றின்பொருளையும் அவற்றின்கண்வரு நிகண்டுச் சொற்களையுந்தெளிந்துகொள்ளவேண்டும். அப்பால் வைதீக சைவ சாத்திரங்களோதுதற்குவேண்டியசைவதீக்ஷையை விதிப்படிபெற்றுப்

பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர செபவனுட்டானமுடையராய்த் தேவார திருவாசகமாதிய தமிழ்வேதங்களைப் பண்முறையோதப் பயின்று கொள்ளவேண்டும்.

பின்னர், தமிழ் இலக்கணச்சுருக்கங்களில் ஒன்றிரண்டைக்கற்று, நன்னூலைத்தொடங்கிக் காண்டிகை விருத்தியுரைகளுடன் ஆராய்ந்து * குமரகுருபரமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், சிவஞானயோகிகள், கச்சியப்பமுனிவர், சுப்பிரமணிய முனிவராதியோர் செய்த பிரபந்தங்களையும், கந்தபுராணம், பெரியபுராணம், கோயிற்புராணம், காஞ்சிப் புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற் புராணம், காசிகாண்டம், பிரமோத்தரகாண்டம், உபதேசகாண்டம், வாயுசங்கிதை, பிரபுலிங்கலீலை, பாகவதம்முதலிய தமிழ்ப்புராணங்களையும், இராமாயணம், பாரதம் என்னுந் தமிழ் இதிகாசங்களையுங்கற்று இலக்கிய அறிவை யீட்டி முற்றெடுத்த இலக்கண அறிவை மேலும் வளர்க்குமுகத்தால் அகப்பொருள்விளக்கம், புறப்பொருள்வெண்பாமாலை, வெண்பாப் பாட்டியல், தண்டியலங்காரம்; நேமிநாதம், வீரசோழியம், குவலயானந்தம் ஆகிய இலக்கணநூல்களைக்கற்று, கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கணவிதிகள் அமைவரு முறைகளையுங் கண்டுணர்ந்து செல்ல வேண்டும். அப்பால், தொல்காப்பியமென்னும் பழம்பெருநூலை இளம்பூரணஞ், சேனாவரைய, நச்சினார்க்கினிய மென்னு மூவுரைகளோடு நன்றாராய்ந்து; சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நைடதம், இரகுவம்சமாதிய தமிழ்க்காவியங்களையும் ஓதியுணரவேண்டும். சிந்தாமணி முதலிய ஆருகபௌத்தகாவியங்களைச் சைவநன்

---

* குமரகுருபரமுனிவரியற்றிய பிரபந்தங்கள், திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, காசிக்கலம்பக மென்றித்திறத்தன. சிவப்பிரகாச முனிவரியற்றிய பிரபந்தங்கள், நால்வர் நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, நன்னெறி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா வென்றித்திறத்தன. சிவஞானயோகிகளியற்றிய பிரபந்தங்கள், அரதத்தாசிரியர்சுலோகபஞ்சகமொழிபெயர்ப்பகவல், சிவதத்துவ விவேகம், சோமேசர் முதுமொழிவெண்பா, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்; திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயிலந்தாதி, திருத்தொண்டர் திருநாமக்கோவை யென்றித்திறத்தன. கச்சியப்பமுனிவர்பிரபந்தங்கள், தணிகையாற்றுப்படை முதலியன. சுப்பிரமணியமுனிவர்பிரபந்தங்கள், துறைசைக்கோவை முதலியன.

மாணாக்கர் கற்றல் தகுங்கொலோவெனின், அவற்றினிடத்துப் பொது வான உலகியனீதி கூறப்படுதலானும், தொல்காப்பிய இயற்றமிழ்ப் பிரயோகம் மிகவருதலானும், அப்பயனோக்கிக் கற்கலாமென்க. ஆயி னும், கற்குமிடத்து அவைபால் மனமழுந்தப்பயின்று அவற்றின் கொள்கைவசத்தராகாமல் தஞ் சுயசமயசித்தாந்தப் பார்வையாற் கற்கவேண்டும்.

தம்மதச்சார்பினதாய் மிக்கபயன்றரக்கூடிய நூல்களை ஒருமுறை இருமுறை மும்முறைதானும் அழுந்தப்பார்த்து மெய்ப் பொருளுணரவேண்டும். புராணேதிகாசங்களை அவை அவை தோன் றிய தேசகால வழக்க பழக்கங்களுடன் ஒட்டிப்பார்த்து, நூலாசிரியர் கருத்தும் அவர் எடுத்தோது வன்மையும், அணி அலங்காரச் சிறப்பு களும், உள்ளுறையாக மறைதரப் பொதிந்துள நுண்பொருள் யாதென் றும் வகை வகை ஆராய்ந்துணர்ந்து செல்லவேண்டும். "எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்" "எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும்அப்பொருள், 'மெய்ப்பொருள்காண்பதறிவு" என்னுந் திருவள்ளுவர் மொழிகளைத் தினமும் அயராமல்ஞாபகத்தி லிருத்திக்கொள்ளவேண்டும்.

இப்பருவத்தே தருக்க அறிவைப் பெருக்குமாறு தருக்கசங்கிரக தீபிகை, தருக்கபரிபாடை ஆகியநூல்களையுங் கற்றுவரவேண்டும். இலக்கணவிலக்கிய அறிவு மேலும் வளர்தர இறையனார் அகப்பொரு ளுரை, பிரயோக விவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப் பியச் சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி என்பனவற்றை யும் சங்கநூல்களாகிய * எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, கல்லாடம், பெருந்தேவனார் பாரதம் என்பனவற்றையும், தெய்வவிலக்கியங்களாகிய திருக்குறள், திருக்கோவை என்பனவற்றை

---

* எட்டுத்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம்.

பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற் றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன.

பதினெண் கீழ்க்கணக்கு "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப் - பால்கடுகங் கோவை பழமொழி - மாமூல - மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே - கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்பதனாலறிக.

யும், பரிமேலழகருரை பேராசிரியருரைகளோடு அறிவெழப் பன் முறை நன்றாராய்ந்து கொள்ளவேண்டும். தருக்க நூலாராய்ச்சியுடன் பூகோள ககோள கணித நூலாராய்ச்சிகளையுங் குறைவற ஈட்டி, தரும சொரூபங்களையும் ஆசார பிராயச்சித்தங்களையுங் கலியுகத்துக்கேற்ப விரித்துரைக்கும் பராசரஸ்மிருதி முதலிய தருமநூல்களையும் ஐயவிபரீதங்களறக் கற்றுக்கொள்ளவேண்டும். யாஞ்சவற்கியர்பால் பதியுண்மை ஆராயப்புக்க சல்லியர் ஆங்கவர் ஓதியவற்றைச்சூழ்ந்து மேலும் மேலும் வினநிகழ்த்தி ஐயமகற்றி உண்மைதெளிந்த முறைபோலக் கற்குமெவற்றையும் ஆசிரியன்பால் அயர்வின்றி ஆராய்ந்துணர்ந்து செல்லவேண்டும். இயலுமானல், தமிழ்ப்பெரும்புலமைக்கின்றியமையா வடமொழியிலக்கியவிலக்கணவாராய்ச்சியுஞ் சிறிது செய்தல் மிக்க பயன்றரும்.

இறுகாறுஞ்சொல்லிவந்தமுறைப்படி கல்விபயின்றுவரும் மாணுக்கர், தம்பயிற்சியின் விசேடநோக்கம், பொருள், பண்டம், உத்தியோகம் முதலியனவற்றைத் தேடும்பொருட்டெனக் கொள்ளாது, அறிவைவளர்த்தலும், வளர்க்குமவ்வறிவின் றுணைக்கொண்டு உலகியலையுந் தம்மியல்பு வரவு போக்குகளையும் தம்மைப்பந்தித்துள்ள பாசத்தினியல்பையும் தம் நாயகனுகிய பதியின் இயல்பையும் உணரவேண்டுமென்பதே முக்கிய நோக்கமும் பேரவாவுமாகச் சதாகாலமுஞ் சிந்தையிற்கொண்டு இவ்வெண்ணம் பலித்தற்குளவாகிய வழிவகைகளிலே முயன்றுவரவேண்டும். அத்தகை முயன்றுவரு முறுதியினுனும், மேற்கூறியபடி கல்வியீட்டி எய்திய பருவநலத்தானும்,உலகியலுணர்ச்சியானும் அறிவின்முதிர்ந்த மாணுக்கர் சைவசமய விசேடதீக்கையுற்றுச் சைவசமயநெறி, சிவதருமோத்தரம், பரமததிமிரபானு, ஞானமிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்புசிவாசாரியர்கிரியாகாண்டக்கிரமாவலி, சித்தாந்தசாராவலி என்பனவற்றையும் சதுர்வேததாற்பரியசங்கிரகம், சிவதத்துவவிவேகம், சிவகர்ணமிர்தம், பிரமதருக்கத்தவமாதியனவற்றையுங்கற்று வைதிக சைவானுட்டானங்கைவரப் பயின்றுகொள்ள வேண்டும்.

அதன்மேல், மனமிகத்துயராய் நல்லதின்னலனுந் தீயதின்றீதுங் கண்டு புண்ணியபாவங்களைப் பகுத்துணர்ந்து நன்னெறிச்சேறு மியல்பினராய் விவேக அறிவுதோன்றி, கொள்ளிவட்டம்போலும் காற்றூடி

போலும்சூழன்றுசூழ்ந்துவரும் 'பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் நிருவாணவிஞ்ஞானதீக்கையுற்றுப் பரிபக்குவமெய்திய நன்மாணுக்கரே சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய அத்துவித சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் அவற்றினுரைகளோடும், வேதாந்தசித்தாந்த சாத்திரப்பொருளனைத்தையுமடக்கி விளக்கும் சகலகலாரூபமான சிவஞானமாபாடியத்தினோடுங் கற்பதற்கதிகாரிகளாவர். சிவஞானபோதங் கற்கப்புகுமுன், சைவாகமங்களிற் சிலவற்றையும், சரியை, கிரியை, யோகமென்னும் மூன்று பாதங்களையும் விரிக்கும் சோமசம்புபத்ததி, வருணபத்ததி என்னும் நூல்களையும் ஆவசியகங் கற்றுக்கொள்ளவேண்டும். ஆகமங்களின் பொருள்கள் தம்முள் வேறுபட்டு முரணுவதாலும் உபநிடதங்களின் பொருள்கள், துவித, விசிட்டாத்துவித, கேவலாத்துவித பாடிய வுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலானும் அவைகளைச் சைவசித்தாந்த ஞானகுரவர் முன்னிலையிலே ஓதியுணரவேண்டும்.

இப்பரிசோதிமிக்கறிவுற்றுப் பக்குவமெய்தாப் புல்லறிவாளர் முப்பொருளியலைக் கற்றிட முயலுதல் முடவன் கொப்புத்தேனுக் காசைப்படுமா றொக்குமன்றோ! அன்னவர்க்கோதி யுணரவைத்தல் யார்க்குத்தானமையும். பருவமெய்தித் தாமாயுணராச் சிறுவர்க்குக் காமவின்பத்தியல்பைச் சொல்லால்விளக்கியுணர்த்த வல்லாருமுளர் கொல்லோ!

தற்காலம் இலங்கையில் நவீனபோலியாகவும் சுத்தமாகவும் நிலவாநிற்கும் சைவமதத்தினைச்சார்ந்த அருட்பெரும்பாலார் தங்கள் அருமைப்பெருமைச்சிறுவர்களைச் சவலைப்பருவ நீங்காமுன் தமிழ் நெடுங்கணக்கையும் ஆத்திசூடி முதலிய சில்லறை நூல்களையும் வாசக புத்தகங்கள் ஒன்றிரண்டையுங் கிள்ளைகட்குப்பயிற்றுமாறு விரைவிலேகற்கக் கற்பித்து அவ்வளவில் ஏட்டைக் கட்டுவித்து அரசவுத்தியோகத்துக் கேற்றவராக்கு மவாமேலீட்டால் அங்கிளங்கற்கச் சைவ கலாசாலைவாய்க்காவிடத்துக் கிறிஸ்தவபள்ளிக்காயினும் அனுப்பி விடுகின்றார்கள். அங்ஙனமிவர்கள்சென்று பயில்வருநாளில் படிப்படியே தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியையும் குலமதாசார வொழுக்கங்களையும் புறக்கணித்துக் கைசோர விடுகின்றார்கள். ஆயிரத்தில் ஒருவரிருவர் வாலிபதசையடைந்துழியேனும், அதன்பின்னர்

லௌகிக குடும்பவிடயங்களில் அமிழ்ந்திச் சுழலுநாளிலேனும் தம் குறை நினைந்து ஐயோ வாணாளை வீணாளாய்க் கழித்தனம் இனியா வது சைவமதநூல்களை ஆராய்வோமென் றுருநினைந்து குரவரைத் தேட முயல்வது முண்டு. இத்தன்மையோர் சிலர் அனேக முறை களில் ஒருவரையடுத்து ஞானநூல்களைக்கற்பிக்கும்படி கேட்ட விடத்து, அவர் அங்ஙனஞ் செய்யவுளமிரங்கியும் அன்னோர் பரிபக்குவ மின்மை நோக்கி, மறுத்துவிட்டதை நாமறிவோம். உயர்ந்த ஓர் மலையினுச்சிக்கண்ணை யடைய விரும்பினா னொருவன் அடிமுதற் படி நிரை யிவர்ந்துசெல்லாது ஒரேமுறையில் உன்னித் துள்ளியுற முயன் றால் அஃதமைவ தெங்ஙனம்.

இவ்வுண்மையைச் சிந்தித்து ஒப்புக்கொள்ளாமல் தங்கள் வேண்டு கோட் கிசையாது மறுத்தனரே என்று மனநொந்து, தாங்கற்றளவில் பெற்றுள்ள அறிவாற்றல் முப்பொருளியலையாராய்தற்கமையாதோ வென்றும் வாளாமயங்குனர்க்கும் அன்னவரை ஒக்கும் பிறருக்கும், தங்கள் திறனிலை யுணருமாறு முப்பொருளைக்குறித்துச் சைவாகம சாத்திரங்கள்கூறும் பொருட்பொழிப்பின்னதென்றும், அதன்பால் அன்னவர்க்கு (உணரும் பக்குவமின்மையால்) நிகழ்ந்தெழக்கூடிய ஐய விபரீத மலைவுகளில் மாதிரிக்குச்சிலவற்றையுஞ் சுருக்கி இங்ஙனங் காட்டுவாம்.

### முப்பொருளைக்குறித்துச்
### சைவாகமசாத்திரங்கள் கூறுஞ்சாரப்பொழிப்பு.

1. தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி எண்குணத்தேகனாய் விளங்குங் கடவுளைப் பதியென்றும், அனேகமாகிய ஆன்மாவைப் பசு வென்றும் ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை என்னும் நான்கினையும் பாசமென்றுங் கூறப்படும். பதியின் எண்குணங்களாவன, சருவஞ்ஞத்துவம், திருத்தி (அல்லது பூர்த்தி,) அநாதிபோதம், சுவதந் திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பனவாம். இவற்றை முறையே தன்வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல்,இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்று தெளிக. நிராமயான்மாவை அநாதி போதத்தினும், விசுத்ததேகத்தினை அலுத்தசத்தியினும் அடக்கி அறு

குணங்களாகவும், இவ்வாறையும் சத்து, சித்து, ஆனந்தமென்று மூன்றனுளடக்கி முக்குணங்களாகவுங் கூறவும்படும். பதியை "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று கூறுவதென்னையெனில், சாத்துவிக, இராசத, தாமதமென்னும் மாயாகுணங்களில்லாதவனென்னுங்கருத்துப்பற்றி யென்க.

2. ஏகனாகிய பதிக்கு அநாதிபோதமும் சுவதந்திரமுமுடைமையின், ஒருவருமறிவிக்காமல் எல்லாவற்றையுமறியுமாற்றலும் ஆன்மாக்களுக்கு அறிவிக்குந் தன்மையுமுண்டு. அனேகமாகிய பசுவுக்கு அறிவித்தால் அறிகின்றகுணமும் பிறருக்கு அறிவிக்க வியலாத குணமுமுண்டு. ஆணவமலத்திற்கு ஆன்மா வேண்டுங்காரியத்தை மறைத்து வேண்டாக்காரியத்தில் விருப்பங்கொடுக்குங்குணமும், புண்ணிய பாவமாகிய கன்ம மலத்திற்கும் அசுத்தாசுத்தமாகிய மாயா மலத்திற்கும் ஆன்மா ஆணவத்லதப் பொருந்தினால் அவ்வாணவத்தில் அழுத்துவித்தல், பதியைப் பொருந்தினால் அப்பதியுடன் அழுத்துவித்தல் முதலிய குணமுமாம்.

3. இவ்வாறு நித்தியப்பொருள்களும் வியாபகம் வியாத்தி வியாப்பியம் என மூவகையாயிருக்கும். இவற்றுள் வியாபகமாவது நிறைந்திருத்தல், வியாத்தியாவது சமநிறைவாயிருத்தல், வியாப்பியமாவது அடங்கியிருத்தல். அஃதெவ்வாறெனில், சமுத்திரம் வியாபகம் அதுபோலும் பதி, அச்சமுத்திரத்தில் தண்ணீர் வியாத்தி அதுபோலும் பதியிடத்தில் ஆன்மா, அத்தண்ணீரில் உப்பு வியாப்பியம் அதுபோலும் ஆன்மாவிடத்தில் பாசமென்க.

4. சிவபதியாகிய கடவுளர் ஆன்மாக்களுடன் கண்ணும் ஆதித்தனும்போலப் பேதநிலையினருமல்லராய், உடலுயிர்போல அபேதநிலையினருமல்லராய், குணகுணிபோலப் பேதாபேதநிலையினருமல்லராய், அம்மூன்றற்கும் பொதுவாய்க் கண்ணொளியும் ஆன்மபோதமும்போல அத்துவிதநிலையினராயிருப்பர்.

5. தோன்றி நின்றொடுங்கும் பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணனாகிய கர்த்தா வேண்டுமென்றன்ன பலநியாயமுகத்தால் அளவைகட்கொப்பப் பதியுண்மையும், உடலைக்கொண்டு ஐம்புலன்களுக்கும்

வேருய ஆன்மாவுளதெனகாட்டிப் பசுவுண்மையும், நிமித்தகாரண ஞகிய குலாலன் காரியப்பொருள்களாகிய கடம் முதலியன வரைதற்கு முதற்காரணமாகிய மண்முதலியனவேண்டிநிற்குமுறைகாட்டி, நிமித்த காரணப்பதிக்குப் பிரபஞ்சகாரியத் தோற்றவொடுக்கப்பொருட்டு முதற்காரணமாயை வேண்டற்பாலதென்று மாயையுண்மையுஞ் சாதிக்கப்படும்.

6. ஒன்றிலொன்று கலந்து அடங்கியிருக்கும் இவ்வாறுபொருளும் அனுதிநித்தியமாயிருப்பனவன்றி எங்கும் வியாபகமாயுமிருக்கின்றன. பதிதான் அனுதி நித்தியம் மற்றைய பசு முதலியன எவ்வாறு அனுதிநித்தியமெனில், சூரியனுள்ளபோதே கண்ணும் அக்கண்ணை மறைத்த இருளும் உளவேயாகலின் பதியின் அனுதிநித்தியவியல்பு பசு முதலியவற்றுக்கும் அமையுமென்க. எங்கும் வியாபகமாதல் எவ்வாறெனில், எண்ணிறந்த கண்களுக்கு ஓராதித்தனிருந்து விளக்குவதுபோலப் புவனங்கள்தோறுஞ்செறிந்துள எண்ணிறந்த ஆன்மாக்களுக்குப் பதி ஒருவனே அறிவித்தலானும் கண்ணுனது சூரியமண்டல முதலிய எல்லாவிடங்களினும் போக்குவரத்தில்லாமல் எல்லாக் காரியங்களையுமறிதலானும் இருளொன்று எண்ணிறந்தகண்களையும் மறைத்தல்போல ஆணவமலமொன்று எண்ணிறந்த ஆன்மாக்களையும் மறைத்தலானும், பலதானியங்கள் அந்தந்த ஊரிலிருப்பவர்களுக்கு ஆங்காங்கே புசிப்பாயிருத்தல்போலப் பலகன்மங்கள் அந்தந்தப்புவனங்களிலிருக்கும் ஆன்மாக்களுக்கு ஆங்காங்கே புசிப்பாயமைதலானும், குலாலனுனவன் பலபண்டங்களை அந்தந்த ஊரிலிருப்பவர்களுக்கு ஆங்காங்கே படைப்பதுபோல அசுத்தாசுத்த மாயையானது பல தனுகரணுதிகளை அந்தந்தப் புவனங்களிலிருக்கின்ற ஆன்மாக்களுக்கு ஆங்காங்கே படைத்தலானும் இவ்வாறுபொருள்களும் வியாபகமென்றே சொல்லப்பட்டனவென்க. இப்படி வியாபகமாயிருக்கின்ற ஆறு பொருள்களும் ஒன்றுக்கொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டனவெனில், அனுதியிலே ஆன்மாக்கள் ஆணவமலத்திற்கிடந்தார்கள், அவ்வாணவமலம் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது, இதனையுணர்ந்த பதியானவர் ஆன்மாக்களது விருப்பத்துக்கேற்ற மாயாகருவிகளைக் கொடுத்து அவைகளினிடமாகக் கன்மங்களைப் புசிக்கச்செய்வார், அனுதியிலே சகலலோகங்களுமுண்டாகின்ற முறைமை இவ்வாருகும்.

7. ஆன்மாக்கள் அனாதியில் ஆணவமலத்திற் கிடந்தனரென்றால் அவ்வாணவமலம் அவர்கட்குப் பதியினால் கூட்டிவைக்கப் பொருந்தியதோ அன்றித் தானேவந்து பொருந்திற்றோவெனில், பதியானவன் சர்வானுக்கிரக நின்மலனாதலினால் [illegible] கூட்டிவைத்திரான், ஆணவமலமுஞ் சடமாதலால் தானேவந்து பொருந்தவும் மாட்டாது, ஆதலால் ஆன்மாக்களே ஆணவமலத்தைப் பிடித்தனரென்க.

8. ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோவெனில், இயற்கையானால் பாலுக்கு வெண்மையும் கரிக்குக் கருமையும் ஒருக்காலும் விட்டுநீங்காததுபோல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் ஒருக்காலும் விட்டுநீங்காது. செயற்கையானால், வெள்ளைவத்திரத்தில் அழுக்கேறுவதுபோல முத்தியிலும் வந்துபொருந்தும். ஆதலால் இரண்டுமன்று, செம்புக்குக் களிம்பும் நெல்லுக்கு உமியும் கடல்நீருக்கு உப்பும்போல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அனாதி செயற்கையென்றும் அனாதிசையோகமென்றுஞ் சொல்லப்படும்.

9. இந்த ஆணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுக்கும்; கொடுத்த விருப்புக்கிசையக் கன்மங்களையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, ஆன்மாக்களும் கன்மத்தை அறிந்தெடுத்துப் புசிக்கமாட்டார்கள், விரும்பப்பட்ட கன்மமுந்தானேவந்து ஆன்மாவைப்பொருந்தமாட்டாது, இந்தச் செய்தியை யுணரும் பதியே இரக்கத்தினால் அவ்வான்மாக்கள் கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அத்தனுவினிடமாக அக்கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிப்பான். அஃதெவ்வாறெனில், குழந்தைக்குப் பாலின்கண்ணுண்டாகியவிருப்பம் தாய்கொடுத்தவிருப்பமோ குழந்தைக்குண்டாகிய விருப்பமோவெனில், தாய்கொடுத்தவிருப்பமானால், அவள் கொடுக்கின்றபோதெல்லாம் பாலையருந்தவேண்டும், குழந்தைக்குண்டாகிய விருப்பமானால் மாந்தங்கொண்டவேளையினும் மாறாதருந்தல்வேண்டும், இவ்விரண்டுமின்மையால் பசியே குழந்தைக்குப்பாலின்கண் விருப்பத்தைக்கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்த பசியும் பாலையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, விரும்பியகுழந்தையும் பாலையறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது, விரும்பப்பட்ட பாலும் குழந்தைவாயில்வந்துபுக மாட்டாது, இந்தச்செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே பாலையெடுத்துப் பாலடையிற்பெய்து குழந்தையின் வாயிலேவைத்துப்

புகட்டுவள். இவற்றுள் குழந்தையைப்போலும் ஆன்மா, பசியைப் போலும் ஆணவமலம், பாலைப்போலுங் கன்மமலம், தாயைப்போலும் பதி, பாலடையைப்போலும் தனு எனவறிக.

10. ஆணவமலம் சடப்பொருளாதலின் விருப்புமுதலியவற்றைக்கொடுக்குஞ்செய்தி அதற்கெங்ஙனமுண்டெனில், மயக்கம், வெம்மை, தண்மை முதலியவற்றை முறையேகொடுக்கும் விஷம், தீ, நீர் முதலிய சடப்பொருள்களுக்குச் செய்தியுண்டானாற்போல அதற்கு மொருவகைச் செய்தியுண்டென்க. இறைவன் ஆன்மாக்களுக்குத் தனுக்களைப்படைக்குமிடத்து பாண்டங்களைத் தன்னினைவின்படி செய்யாது பிறர் நினைவின்படி வரையுங் குலாலனைப்போல ஆன்மாக்கள்நினைவின்படியேபடைப்பான்.

11. ஆன்மாக்கள் எங்கும் வியாபகராயிருத்தலின் தனுக்களை எவ்வாறு பற்றுவரெனில், படிகமலையானது எந்தப்புறத்தில் வன்னத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வதுபோல எல்லாப் புவனங்களிலும் வியாபகராயிருக்கின்ற ஆன்மாக்கள் எந்தப்புவனத்திலே சரீரத்தைக்கொடுத்தாலும் பற்றிக்கொள்வர். அஃதெவ்வாறெனில், படிகமலை ஒன்று, அப்படிகமலைக்கு ஒளி ஒன்று, அவ்வொளிக்கு பற்றுங் குணமொன்று, பற்றுந்தொழிலொன்று, வன்னமொன்று, வன்னத்தைப் பற்றுவிப்பானொன்று ஆக அறுவகைப்படும். அவற்றுள் படிகமலையைப்போலும் ஆன்மா, படிகமலைக்கொளிபோலும் ஆன்மபோதம், அவ்வொளிக்குப் பற்றுங்குணம்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், அவ்வொளிக்குப் பற்றுந்தொழில்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலும் மாயாகருவி, வன்னத்தைப் பற்றுவிக்கின்றவனைப்போலும் பதி எனவறிக.

12. ஆன்மாக்களுக்கு அறியுங்குணமிருத்தலினாலே அவர்களை ஆணவமலம் எவ்வாறு மறைக்குமெனில், சந்திராதித்தருக்கு ஒளியிருந்தும் இராகுகேதுக்கள் மறைப்பதுபோலும், பிரகாசம்பொருந்திய நெருப்பை நீர் மறைப்பதுபோலும், ஆகாயத்தை மலைமறைப்பது போலும் ஆன்மாக்களை ஆணவவிருள் மறைக்குமென்க. இம்மறைப்புத்தான் ஆன்மாக்களுக்குவருவானேனெனில், அவர்கள் கன்மத்தால் வந்தது. ஆனால், ஆன்மாக்கள் அவயவமின்றி நிரவயவராயிருக்க அக்

கன்மந்தான் எவ்வாறுவந்ததெனில், தாம் நிரவயவரென்பதை மறந்து அவயவரென்னுங்கருத்துக்கொண்டமையால் அக்கன்மம் வந்தது. அக்கன்மத்தால் மாயையுண்டாயது, அம்மாயையால் தனு கரண புவன போகங்களுண்டாயின.

13. பதியானவர் ஆன்மாக்களுக்குக் கன்மத்தைப் புசிப்பிக்குமிடத்து இச்சாஞான கிரியாசொரூபராயிருந்து புசிப்பிப்பார். அஃதெவ்வாறெனில், ஆன்மாக்களை முத்தியிற்சேர்க்கவேண்டுமென்பதே இச்சை, ஆன்மாக்கள் இச்சித்தகன்மங்களை அறிவதே ஞானம், அக்கன்மங்களை ஆன்மாக்களுக்கு ஊட்டி யுறக்கித் தொலைப்பித்தலே கிரியை எனவறிக. ஆன்மாக்கள் அக்கன்மங்களைப் புசிக்குமிடத்தும் இச்சாஞானகிரியாசொரூபராயிருந்தே புசிப்பர். அஃதெவ்வாறெனில், பண்டபதார்த்தங்களிற் சென்று பற்றுதலே இச்சை, அவைகளைப் பகுத்தாராய்தலே ஞானம், சர்வ்தலதயுந் தனதென்றழுந்துதலே கிரியையாமென்க.

14. ஆன்மாக்களின் கன்மங்கள், தூலம், சூட்சுமம், அதிசூட்சுமம் என மூவகையாயிருக்கும். வினைகள் யாவும் தூலகன்மமென்றும், அவ்வினைகளுக்குப் பின்றொடர்பலனாகவரும் புண்ணிய பாவங்களெல்லாம் சூட்சும கன்மமென்றும், இப்புண்ணிய பாவங்கட்குப் பின்றொடர் பலனாகவரும் இன்பதுன்பங்க ளனைத்தும் அதிசூட்சுமகன்மமென்றுந் தெளிக. இம்முத்திறக்கன்மங்களும் முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் எனப்படும். இருவினைகள் ஆகாமியமும், அவ்வினைப்பயனாகிய புண்ணியபாவங்கள் சஞ்சிதமும், அப்புண்ணிய பாவங்களின் பயனாகிய இன்பதுன்பங்கள் பிராரத்துவமுமென்றுணர்க. ஒருவன் பயிரிடுவதுபோலும் இருவினைகள், அப்பயிரால் உண்டான பலனைக் களஞ்சியத்திற் கட்டிவைத்தல் போலும் புண்ணிய பாவங்கள், கட்டிவைத்ததை நாளுக்குநாள் சிறிதுசிறிதா யெடுத்துண்பதுபோலும் இன்பதுன்பங்களை ஆன்மாக்கள் அநுபவித்தல்.

15. கன்ம பலன்கள் ஆன்மாக்கள் நினைத்தவண்ணம் பலன்பட்டு வருவதில்லை. ஒருவன் முன்னே பனைநட்டுப் பின்னர்க் கத்தரிநட்டு, அதன் பின்னர் கீரைப்பயிரிட்டால், பின்பயிரிட்டகீரை பதினைந்து நாளள்விற் புசிப்பாகும்; கத்தரி இரண்டுமாதத்திற் பயன்றரும், பனை

பதினைந்து வருடத்தின்பின் பக்குவப்பட்டு வரும். அதுபோல ஆன்மாக்கள் முன்பு ஆர்ச்சித்த கன்மம் முன்னேபலன்பட்டுவாராமல் வெகு சனனத்திற்குப்பின் பலன்பட்டு வருதலும் பின்பு ஆர்ச்சித்தகன்மம் உடனே பலன்பட்டு வருதலுமுண்டு.

16. கன்மம் ஆன்மாக்களுக்குப்புசிப்பாகவருங்காலம் ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியாத்மிகம் என மூவித தாபத்திரயங்களால் வரும். ஆதிதெய்விகமாவது, தாய்வயிற்றின் கண்ணே கருப்பாசயத்து வேதனை, பிரசவவேதனை, உடம்புதிரைதல், முதலிய மூப்பால் வருந்துன்பம், அளவிலா அஞ்ஞானத்தால்வருஞ் சங்கற்பவேதனை, யமன் உயிர்கொண்டு போகும்போது எய்தும் மரணவேதனை, நரகத்துன்பம் முதலியவாகத் தெய்வத்தையே காரணமாகக்கொண்டு வருவனவாம். ஆதிபௌதிகமாவது குளிரால் வரும்துக்கம், மழையினால் வருநடுக்கம், உஷ்ணமுடைய கோடைக் காலத்தால் வருதுன்பம், காற்றினால்வருதுன்பம், மின்னல் இடி என்பவற்றால் வருதுன்பம் முதலிய சடப்பொருள் காரணமாக வருவதாம். ஆதியாத்மிகமாவது தேகத்தைப்பற்றிவருவிதனமும் மனதைப்பற்றிவருவிதனமுமாக இருதிறப்படும். அது சடத்தோடுகூடிய சேதனவாயிலாக வருவதாம். இவ்வினைகள், உலகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று உயர்வுடையதாய் முறையே நிவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்பவைகளிலடங்கி, அசுத்தபோகம், மிச்சிரபோகம், சுத்தபோகம் என்பவைகளைக் கொடுக்கும். கூவல், தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றை அமைத்தல் உலக புண்ணியம், யாகமுதலியவற்றைச் செய்தல் வைதிக புண்ணியம், சிவபூசை முதலியவற்றைச் செய்தல் அத்தியான்மிக புண்ணியம், யோகஞ்செய்தல் அதிமார்க்க புண்ணியம், மந்திரோச்சாரணம் ஞானசாஸ்திர முதலியவற்றை ஓதுதல் மாந்திரபுண்ணியமாம்.

17. இக்கன்மங்கள் ஆன்மாக்களுக்கு எவ்வாறேறுழியுமெனில், ஒருவன்பயிரிட்டுக் கண்டநெல்லை முக்கூறாக்கி ஒருகூற்றைக் களஞ்சியத்திலும், மற்றொருகூற்றை உணவுக்காகச் சேமித்தும், மூன்றாங்கூற்றை வயலில் விதைத்துமிருக்க, களஞ்சியத்திலிருந்த நெல் தீப்பட்டு வெந்தும், உணவுக்காக வைக்கப்பட்ட நெல் உண்டு செலவழிந்

தும், விதைக்கப்பட்ட நெல் மழையின்றிக் காய்ந்தழிந்தொழிவது போல ஆன்மாக்களுக்குப் பக்குவகாலம் வந்துழி, சஞ்சித கன்மமானது ஞானசாரியருடைய திருவருள் நோக்கால் வெந்தும், பிராரத்துவகன்மமானது எடுத்த சரீரத்திற்குப் புசித்துத் தொலைந்தும், ஆகாமிய கன்மமானது நின்மலஞானத்தால் மேலைக்கு வராமலும் நீங்கிப் போய்விடும். இவ்வாறே சஞ்சித பிராரத்துவ ஆகாமிய மென்னும் மூவகைக்கன்மங்களு மொழியு முறைமை யென்றுணர்க.

18. கண்ணானது ஒருக்கால் இருளோடும் ஒருக்கால் ஒளியோடுங் கூடியிருப்பதன்றி எக்காலத்துந் தனித்திராததுபோல ஆன்மாக்களெல்லாம் மலத்தொடுகூடி அதன்பாலழுந்தி அதன்மயமாயேனும், அன்றிப் பதியொடுசார்ந்தழுந்தி அப்பதிமயமாயேனும் இருப்பார்களன்றி எக்காலத்துந் தனித்திரார்கள். மலமுடன் அழுந்திய ஆன்மாக்கள் பெத்தான்மாக்களென்றும், பதியுடனழுந்திய ஆன்மாக்கள் முத்தான்மாக்களென்றும் பெயர்பெறுவர். பதியானவர் பெத்தான்மாக்களிடத்துப் பாலுக்குள்நெய்போலும் முத்தான்மாக்களிடத்தில் தயிருள் வெண்ணெய்போலவுங் கலந்திருப்பார். மலத்திலழுந்திய ஆன்மாக்களுடன் நின்மலனாகிய பதி கலந்திருப்பதெங்ஙனம், ஒளியுமிருளும் ஓரிடத்துறையுமோ வெனில் ஒருமரத்தில் அடிதொட்டு நுனியந்தம் இரசமும் அக்கினியுங் கூடியிருத்தல்போலப் பதியானவர் ஆன்மாக்களைக் கூடியிருப்பாரென்க.

19. அன்றியும் பெத்தான்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று பேதவகுப்பினராவர். ஆணவமலமொன்றுடன்கூடியிருக்கின்ற ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் என்றும், ஆணவமலம் கன்மமலமென்னும் இவ்விரண்டொடுங்கூடியிருக்கின்றன ஆன்மாக்கள் பிரளயாகலர் என்றும், ஆணவமலம், கன்மமலம், மாயாமலமென்னும் இம்மூன்றொடுங் கூடியிருக்கின்ற ஆன்மாக்கள் சகலர் என்றுஞ் சொல்லப்படுவர்.

20. ஆன்மாக்கள் நரகத்திற் றுன்பங்களை யனுபவிக்குமிடத்து அவர்களை விட்டு நீங்காத பதிக்கும் அத்துன்பங்களுண்டோவெனில் ஆதித்தனொளி படிகவொளியிற்கலந்து வன்னங்களைப் பற்றுவித்துந் தான்பற்றாதவாறுபோல ஒருக்காலுமில்லையென்க.

21. ஆன்மாக்கள் எக்காலத்திலும் பிரபஞ்சசையோகராதலால், கேவலம், சகலம், சுத்தமென மூன்றவத்தைகள் அவர்கட்குண்டு. இம் மூன்றும் காரணம், காரியமென இருவகைப்படும். இவற்றுள் காரண கேவலமானது அநாதியிலே ஆன்மாக்கள் அறிவுகெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக்கிடத்தல்; அது கண்ணானது இராக்காலத்திருளிலே ஒளிகெடாமல் விழித்திருத்தல்போலும். காரியகேவலமாவது, நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம் என்னும் ஐந்திடத்தினும், சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் கீழாலவத்தைகள் ஐந்தையுமடைதல்; காரணசகலமாவது அநாதி கேவலத்திலே அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் மாயாகருவிகளினாலே அக்கேவலம் நீங்கிச் சுகதுக்கங்களை அறிதல். அது இராக்காலத்தில் இருளிலே அழுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினாலே இருள்நீங்கிப் பதார்த்தங்களைக் காணுதல்போலுமாம். காரியசகலமாவது இலாடத்தானத்திற்றானே துரியாதீதமுதல் சாக்கிரமீறாயுள்ள மத்தியாலவத்தை ஐந்தையுமடைதல். காரணசுத்தமாவது அநாதிகேவலத்தினும் சகலத்தினும் அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் அருட்டெரிசனத்தினால் அவைகளை விட்டு நீங்கிப் பிரமானந்தத்தை யனுபவித்தல். அது இராக்காலத்திருளோடும் விளக்கோடுங் கூடியிருந்தகண்ணானது ஆதித்தனுதயஞ்செய்தவிடத்து அவைகளைவிட்டு நீங்கி அவ்வாதித்தனைக் கண்டுகொண்டிருத்தல்போலுமாம். காரியசுத்தமாவது நின்மலசாக்கிரமுதல் நின்மல துரியாதீதமீறாயுள்ள மேலாலவத்தை ஐந்தையுமடைதல்.

22. பதியின் பஞ்சகிருத்தியங்களாவன, சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்பவைகளாம். இக்கிருத்தியங்கள் ஆன்மாக்களுக்கோ சரீரங்களுக்கோவெனில், ஆன்மாக்கள் நித்தியராதலால், சிருட்டி, திதி, சங்காரம் வேண்டற்பாலரல்லர்; சரீரம் சடமாதலின் திரோபவமும் அனுக்கிரகமுங் கூடாவாம். இனி அச்சரீரங்கள் முத்தொழிற்படுமிடத்து அவற்றில் ஆன்மாக்கள் அழுந்துவதி

னும் ஆன்மாக்களுடைய இரண்டுதொழில் சரீரங்கட்கில்லாமையி னும் பஞ்சகிருத்தியமும் ஆன்மாக்களுக்கேயாமென்க.

23. பதியானவர் ஆன்மாக்களிடத்தில் பஞ்சகிருத்தியத்தை நடத்துவது எவ்வாறெனில், இவர்களுக்கு மாயாகருவிகளைப்படைத்து அறிவை உண்டாக்குவதே சிருட்டி, மாயாகருவிகளை நிறுத்தி அறிவை நிலைபெறச்செய்தலே திதி, மாயாகருவிகளை ஒடுக்கி அறிவைப்போக்கு வதே சங்காரம். அவர்களுடைய அறியுந்தொழில்களை அருளைக் கொண்டு மலசத்திகளால் மறைப்பித்து அவ்வவர்கள் கன்மங்களைத் தக்கபடி நிறுத்தலே திரோபவம்; அவர்களுக்கு இன்பதுன்பங்களைப் புசிப்பித்துப் புண்ணியபாவங்களாகிய வினைகளை அறுத்தலே அனுக் கிரகமென்க.

24. ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியப்படுதல் எவ்வாறெனில், அவர் கள் அறியுந்தொழிலே சிருட்டி, அறியுந்தொழிலில் நிலைநிற்றலே திதி, அறியுந்தொழில் நீங்கலே சங்காரம், அறியுந்தொழில்நீங்குமிடத் துள்ள அறியாமையே திரோபவம், இன்ப துன்பங்களைப் புசித்துப் புண்ணிய பாவங்களைக் கழித்தலே அனுக்கிரகமென்றறிக.

25. பதியின் பஞ்சகிருத்தியமும் அவற்றில் ஆன்மாக்கள் படுத லும் இவ்வாறாயிருக்க, அவர்கள் பிறந்தார், நரகமுற்றார், மோக்க மடைந்தாரென்று வேதாகமங்கள் கூறுவதெவ்வாறெனில், ஆன்மாக் கள் மாயாகருவிகளைப்பற்றியறிந்திருத்தலே பிறப்பு, அம்மாயாகருவி களை நீங்கி அறியாதிருத்தலே இறப்பு, ஆயாசமுற்றிருத்தலே நரகம், அனாயாசமுற்றிருத்தலே மோக்கம் எனவறிக.

26. ஆன்மாக்கள் மோக்கமடையுமிடத்துக் கெட்டுக்கூடுவரோ கெடாதுகூடுவரோவெனில் கெட்டால் கூடத்தக்கவராகார், கெடா திருந்தால் கூடவேமாட்டார்கள், ஆதலால் ஆன்மா கெடாமல் விடயத் திற்செல்லும், அவ்வான்மபோதம் நிகழ்ச்சிகெட்டுக் கூடுமென்றறிக.

27. பதியானவர் முன்னுரைத்த மூவகை ஆன்மாக்களை ஆட்கொள்ளுமிடத்து, விஞ்ஞானகலருக்கு ஒளியுருவாயும், பிரளயாகலருக்குத் தேவவுருவாயும், சகலருக்கு மனித உருவாயுந்தோற்றி ஆட்கொள்வர். ஆனால், ஆன்மாக்களுக்கு மலப்பிணியினால் சரீரங்கள் உண்டாகும், நின்மலனாகிய பதிக்குச் சரீரமுண்டாவதற்குக் காரணமென்னையெனில், பிள்ளைக்குண்டாகிய பித்தத்தைத்தீர்க்கப் பிதாவுக்கு ஆசைப்பிணியுண்டாவதுபோல, ஆன்மாக்களுக்குள்ள மலப்பிணியை நீக்கவேண்டிப் பதிக்கு ஆசைப்பிணியுண்டாகும், அதனாற் சரீரங்களுண்டாகுமெனக. பதியானவர் ஆன்மாக்களின் மலப்பிணியை நீக்குமுறை அவர்கட்கு இருவினை ஒப்புவந்தகாலத்து வண்ணான் வத்திரத்திலுள்ள அழுக்கை உழுமண்கொண்டு நீக்குவதுபோல மாயா கருவிகளைக்கொண்டு நீக்குவரெனக.

28. இருவினை ஒப்பாவது, ஒருவன் விருப்புறு பதார்த்தங்களையும் வெறுப்புறு பதார்த்தங்களையுங் காணுமிடத்து, விருப்பும் வெறுப்புமற்ற பதார்த்தங்களைக் கண்டாற்போல, நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும் வந்தால், அவ்விரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்குநிலையாம். அஃதெவ்வாறெனில், ஒருவன் வைப்பாட்டியிடத்துச் சிறிதுநாளும் மனையாட்டியிடத்துச் சிறிதுநாளுமாகக்காலங் கழித்துவருகையில், இல்லறநூல்கேட்டவிடத்து வைப்பாட்டியை விடுத்து மனையாட்டியோடு வாழ்வதே சரியென்றும், துறவறநூல் கேட்டவிடத்து, அம்மனையாட்டியும் பாசபந்தத்திற்கேதுவாகலான் அவளையும் விடுத்துத் துறவுபூண்பதே சரியென்றுங்கண்டு பின்னர் அவ்விருவரிடத்தும் விருப்பு வெறுப்பொழிவதுபோல, ஒருவன் பாவமும் புண்ணியமுஞ்செய்துவருகையில் அறநூல் கேட்டவிடத்துப் பாவத்தை நீக்கிப் புண்ணியஞ்செய்வதே சரியென்றும், ஞானநூல் கேட்டவிடத்து அப்புண்ணியமுஞ் சனன மரணத்துக்கேதுவாகலான் அதனைவிடுத்து ஞானத்தையடைவதே சரியெனக்கண்டு பின்னர் இரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்குநிலையே இருவினை ஒப்பாகும்.

29. இருவினையொப்பின்கணுண்டாகின்ற மலநிவிர்த்திக்குக் காரணம் அனுதிதொடத்து மோட்சபரியந்தம் ஆன்மாக்களாலுண்டாகின்ற சிவபுண்ணியங்களாம். அப்புண்ணியங்கள், அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயசரிதை, உபாயகிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரிதை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் எனப் பத்துவிதமாயிருக்கும். இவற்றுள் முந்திய ஒன்பதும் மலநிலை,அவைகள் ஆன்மாக்களாற் செய்யப்படுவன; பிந்திய ஒன்று அருணிலை; அஃது, தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப் பத்துவிதமாயிருக்கும்.

30. இந்தப்பத்தையும் பரிபக்குவனனவனுக்குப் பதியானவர் ஞானசாரியராக எழுந்தருளிவந்து சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலசாக்கிர முதலாயுள்ள ஐந்தவத்தைகளிலடக்கி அந்த உண்மை ஞானத்தை யறிவிப்பார். இவ்வாறு அளவற்ற காலம் ஆணவமலத்தினால் மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கவேண்டுமென்று கடல்போன்ற பெருங்கருணையினாலே சர்வஞ்ஞானமுடைய பதியானவர் தக்க திருமேனிகொண்டு அவர்களை அவ்வாணவ விருளினின்றுமெடுத்து, விஞ்ஞானகலர் முதலிய மூன்று வகையாகத் தொகுத்துத் தனுமுதலிய மாயாகருவிகளைக்கொடுத்து அவைகளினிடமாக நல்வினை தீவினையென்னு மிருவகைவினைகளையூட்டி, அவ்வினையொப்பில் மலபரிபாகமுண்டாக்கி முத்தியிற் சேர்ப்பிப்பார்.

---

பசுஞானத்தினாலும் பாசஞானத்தினாலும் அறியப்படாத சிவபெருமானை அவ்வாது அருள்ஞானக்கண்ணினால் ஆன்மாவில் ஆராய்தல் வேண்டும். புறப்பொருள்களைக் காணுமியல்பினதாகிய கண்ணானது தன்னியல்பை அறியமாட்டாதவாறுபோல தத்துவதாத்துவிகங்களை அறிகின்ற ஆன்மாவானது தன்னையுமறியமாட்டாது தன்னைச் செலுத்

துஞ் சிவபெருமானையுமறியமாட்டாது. சிவபிரான் ஆன்மாவின் கண்ணே அறியற்பாலராம். அசத்தாகிய பிருதிவி முதலிய தத்துவங்கள் நிலையில்லாதனவென்று விவேகித்து அறியின், சிவஞானசொரூபம் வெளிப்படும். அச்சிவஞானத்தினால் ஆசாரியன் மாணாக்கனுக்குச் சித்தாந்த மகாவாக்கியத்தை உபதேசிப்ப, அவன் சோகம்பாவனையை நாடோறும் பயின்றுவந்தால், மாயாகன்மங்களைவிட்டு நீங்குவான். ஐம்புலன்களுக்கு வேறாக ஆன்மா தன்னைக்காண்டலும் பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலுமாகிய இரண்டும் சிவப்பேற்றிற்குச் சாதகங்களாம். அச்சாதகங்களாற் சிவஞானம் விளங்கி ஞேயமாகிய சிவம் காட்சிப்பட்டவிடத்து முன்னர்த் தான்பற்றிய ஏகதேசக்காட்சி வாசனைநீக்குதற்கு ஸ்ரீபஞ்சாட்சரத்தை விதிப்படி செபித்தல் வேண்டும். தனது உடலின்கண்ணே இதயம், நாபி, புருவநடுவாகிய மூன்றிடத்தையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாய்க்கொண்டு, முப்பத்தாறுதத்துவங்களாலமைந்த இதய கமலத்தில் அமர்ந்த பஞ்சாட்சரத் திருமேனியிற், கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுஷ்பங்கொண்டு பூசித்தல்வேண்டும். அங்ஙனம் பூசிக்குங்காற் சிவபெருமான் அறிவுக்கு அறிவாய் விளங்கி ஆன்மாவின் கண் வெளிப்பட்டு இன்பம் அளித்திடுவர். அங்ஙனம் விளங்கக்கண்டுணர்ந்த ஆன்மாவானது அணைகடந்து கடலிற்சென்றடங்குநீர்போல, ஐம்புலத்தடைகடந்து சிவபெருமானுர் திருவடியைத் தலைப்பட்டு அதனினின்றும் நீங்காது என்றும் சுகானந்தப் பெருவாழ்வுறற்பாலதாம்.

---

விரிந்தகன்றாழ்ந்த பெருங்கடல்நீர்ப்பரப்பை ஒரு கைத்துணை நீரிற்காட்டுவதுபோல, முப்பொருளியலைக்குறித்து வேதாகம சாத்திரங்கள் கூறுங்கருத்தைத் தொகுத்துப் பொழிப்பாக்கி இத்துணையுஞ் சொல்லிவந்தவற்றைக்கொண்டு பக்குவமாணாக்கர் நன்றுதெளிந்து

மேலுஞ்சொல்லாதொழிந்த இயல்புகளையு முய்த்துணர்ந்துகொள்வர். அபக்குவர்க்கு, அங்கிலேய அபூரண தர்க்கசாஸ்திரப்பயிற்சி வசத்தானும், நூதன விபரீத விவேகஞானத்தானும் எழக்கூடிய ஆசங்கைகளிற்சிலவற்றை (மாதிரிகாட்டற்காய்) இங்ஙனந் தருகின்றும்.

1. முதலும் ஈறுமில்லாப்பொருள் ஒன்றுளதேல், அது மேல் கீழ் முன் பின்னாகிய எம்மருங்கினும் எல்லையின்றிப் பரந்து யாண்டும் நிறைந்து ஏகமாய், நித்தியசர்வவியாபகமாயிருக்கவேண்டும். பதி எனப்படும்பொருள் அவ்வியல்பிற்றாயின் வேறு பசுபாசங்களென்பவை அதனையொத்து நித்தியப்பொருள்களாவதெங்ஙனம்? அவைதாமிருத்தற்கிடமெங்கே? இடம்பெறின், இடங்கொடுக்கும்பதி அபூரணராதல் வேண்டுமென்றோ!

2. பதி பசுவுடன்கலந்திருக்குமுறை அத்துவிதமென்றால், அதன்கருத்தென்னை? ஏகம் ஏகமே, துவிதம் துவிதமே. இரண்டு பொருள் கலக்குங்கால் பேதமறற்றொன்றாகவேண்டும் அல்லது பேதமுற்றிரண்டாகவேண்டும். ஒன்றாயுமின்றி இரண்டாயுமின்றியிருத்தல் எவ்வாறு? அன்றியும் இரண்டுபொருள் ஒருங்குபடுமாயின், அவை தனித்தனி முன்னிருந்த அளவைப்பிரமாணத்தினும் ஒருங்குசேர்ந்திருக்கும் மொத்த அளவை இரும்டங்கு விரியப்பெறுமன்றோ. ஒரு படி அரிசியும் ஒருபடி பயறும் கலக்கப்படின் அக்கலவை இருபடியாதற்குத்தடையுண்டோ?

3. ஆன்மா ஒன்றா, பலவா, எண்ணும் எல்லையுமற்றனவா? ஒன்றாயினும் பலவாயினும் ஒரு காலவரையில் யாவும் முத்திசேர்ந்துவிடும். அப்பால் பஞ்சகிருத்தியங்களைப் பதி நடாத்துவதெப்படி? ஆன்மா எண்ணு மெல்லையுமற்றனவெனில், ஒவ்வொன்றாகப் பல சேர்ந்தபொருட்டொகுதி எண்வகை கடப்பினும் எல்லைகடக்குமா

றெங்ஙனம்? ஆன்மாக்கள் நாளுக்குநாள் முத்தியிலுஞ் சேர்வதால் அங்ஙனஞ்சேராமல் எஞ்சிநிற்பவற்றின் றொகையானது படிப்படி குறைவுபடுவதில்லையோ?

4. இதற்குமுன் சென்றுபோனகாலத்துக்கு ஒரு எல்லையு மில்லை. எல்லையில்காலத்திலும் முத்தி கைகூடாமல், சனன மரண துன்பங்களிற் சிக்கியுழலும் ஆன்மாக்களுக்கு இனிமேல் முத்திவாய்ப்ப தெங்ஙனம்? பதி தாமுள்ளவரையின் அவரின் பஞ்சகிருத்தியமும் நிகழுமியல்பினதாயின் முத்திபெறு ஆன்மாக்களும் என்றுமுளராதல் வேண்டும். அன்னவர்வகுப்பை நாமுஞ்சேரவில்லையென்று எப்படிச் சாதிக்கலாம்.

5. இரக்கமென்பது பதியினிடம் இயல்பாயுளதெனில், அது அவரை விகாரியாக்கித் தான் கதித்தவிடத்து அவரினது நீதியையுங் கோடச்செய்யுமன்றோ!

6. அறிவித்தாலன்றி அறியாத ஆன்மாவைச் சதாகாலமும் நித்திரைக்கண்கிடப்பதுபோல அறிவின்றிக்கிடக்கவிடாமல், அறிவைக் கொடுத்துக் கன்மத்திலும் இன்பதுன்பநுகர்ச்சியினும் செலுத்துவ தென்னை?

7. பதியானவர் ஆன்மாக்கள்மீது இரக்கமுடையராதலின், அவர்களை அதர்மநெறிக்குய்க்கும் மலபந்தங்களை ஒருக்காலும் முளைய விடாமல் ஒரேமுறையில் வேரறக்களைந்துவிட்டாலென்ன?

8. சூரியனுள்ளபோதே கண்ணும் அதனை மறைக்குமிருளு முண்டாயிருத்தல்போல, பதியுள்ளஞான்றே பசுவும்பாசமு முண்டா மெனில் கண்ணனது ஒளியுடனும் இருளுடனும் மாறிமாறிக் கூடி யிருத்தல்போலப், பசுவானது ஒரோவொருமுறை கூடலாமேயன்றி நித்தியமுங்கலந்திருக்கும் முத்திலையப்பெறுதலெங்ஙனம்?

இன்னுமிவ்வாறே பலப்பல மலைவுகள் மலைமலைபோலெழுந்து அபக்குவரை மயக்க அவர்கள் மலைமுகட்டேய்திய குரீஇ ஆங்குறை தற்கிடங்காணாது நின்று தயங்குவதுபோல மிக்க இடர்ப்பட்டுக் கலங்காநிற்பர்.

அஃதங்ஙனமாக, முற்சொல்லிய முறைப்படி தமிழ்க்கல்வி தொடங்கிப் படித்தற்குக் காலங்கழிந்து வயதேறிவிட்டதே, குடும்ப பாரம் மிகவருத்துகின்றதே, இடம்பொருள் முதலிய துணையில்லையே என்று பல சாட்டுப்போக்குகள் சொல்லத்தலைப்படுவார்க்கு "மனமிருந்தால், இடமுண்டு" என்னும் ஒருவார்த்தையைமாத்திரமே சொல்லி இவ்வியாசத்தை இத்துடன் முடிக்கின்றாம்.

மட்டுநகர்.
1918ஆ மார்கழிமீ 29உ

இங்ஙனம்,
ச. பூபாலபிள்ளை.

நம்மாழ்வார்பேரில் ஸ்ரீஸ்ரீ
குமரகுருபரசுவாமிகள்குலதிலகராகிய
நல்லகுற்றுலக்கவிராயராவர்களியற்றிய

## வண்ணம்.

---

தாந்ததந்தன ஞதந்தனஞ, தனந்தன, தாந்ததந்தன ஞதந்தனஞ, தனந், தனந், தனந்தன, தானதானன, தானதானன, தானதானன, தானதானன, தனனதனதன, தனனதனதன, தனனதனதன, தனன தனதன, தானதந்தன, தானதந்தன, தானதந்தன, தானனதான.

க-ஆவது கலை.

தாந்திதிந்திமி தாதிந்திமிதா, ததிங்கண, தாங்குடிங்கெனவே வன் பணிமே, னடம், புரிந், திடுஞ்சிறு, தாளிஞர்தட, வாவிமேன்மத,யானை கூறிய, போதிலேயுயர், கருடன்விரைவொடு, செலுவதில்லையென, வவனையிணையடி, யணைவுகொடுவிடா, தோடிவந்துகை, யாழிகொண் டுக, ராவரிந்தபு, ராதனர்மாமன்.

ஈந்தவஞ்சனை சேர்வண்டிலையே, யுதைந்தவர், காஞ்சனன்படவே நெஞ்சுகிரால், வகிர்ந், தவன், குழந்தைவி, வேகமார்ப்ரக,லாதன்மாலரி, நாமமேபிர, தானமாயுரை, பொழுதிலவன்முன, மதலைமிசைவளை, யெயிறுதெரிவுற, வெளியில்வருமுயர், நாரசிங்கர்செவ், வானபஞ்சவர், தூதுசென்றச, காயர்நிலாவு.

சார்ந்தவெண்டிரை மோதுங்கடன்மேல், விளங்கிய, பாந்தள்சம் ப்ரமமாகுந்தவிசா,வுறங்,குகொண்,டலென்றவு, தாரர்மாமுனி, வேள்வி காவல்செய்,போதுதாடகை,மாளவேயொரு,தருமயிதிலையி,லனுகிமுது சிலை, நெரியவளைவுசெய், பெருமையுலகுளர், காணவிந்திரை, சீதை மங்கையை, மாமணஞ்செய்த, ராகவமாயர்.
ஆதிநாரணரடிகள்பரவுவோர். (ஞ)

உ-ஆவதுகலை.

தாங்குமம்மலர் வாமெண்கணனுர், சிறந்ததேய், வேந்திரன் கதி சேரும்புவியோர்,களுந், தவம், பெறும்பெரி, தானமாமுனி, வோருநேர்

திதி, தூயமாதவர், காரியார்செயு, முசிதத்தவமிது, பெரிதுபெரிதென, வுதவுமவர்வயின், மதலேவடிவமை, வாழ்குறுக்குடி, மேவுநம்பிய, நாளி லிங்கவ, தாரசொரூபர்.

சேர்ந்தபண்பெற வேசொம்புடனே, முழங்கிசை, யார்ந்ததங்கவி யால் விண்டுவின்மே, லுவந், துளன், புதங்கவி, சேடநான்மறை, யோது சாரம்வி,ளுவிமேலுரை,ஞானநூல்வகை,பொருளுமினியசொல்,விதமு மமைவுற,வுரிமையிக்பர,மகிமைபுரியந,லாயிரந்தமிழ்,பாடியன்றுசொல், போதர்புங்கவர், மோனமனேலர்.

சார்ந்த சங்கவி ரோதஞ்சொலுபோ, தறிந்தவ, ராய்ந்தசிந்தை புகாவொண்பொருணூல்,பகர்ந், தபின்,புவந்திவர்,தாமனேரத, மாகயா விலு, மேகமாய்நிறை, தேவநாயகர், வரதரெனவவ, ரவர்களுரைகவி, பலவுமொருகவி, யெனமுன்மொழியவொர், பான்மைதந்தவு, பாயர்சுந் தர, மீறுமொய்ம்பின்மு, நூலணிமார்பர்.

ஆவலாயடியர்பணிசரணினர். (வ)

௩-ஆவதுகலை.

சேர்ந்தவெங்கதிர் பாயுஞ்சிறையோ, திமங்கொடு, வாஞ்சை மிஞ்சவு மாதக்தொறுமே, யிசைக், திடும், பெருந்திரு, நாளிலேகரு டேசன்மேலெழின், மீறுகேசவர், கூடவேவர, முருடுதுடிதவின், முழவி னெலியெழு, வரிசையொடுதெரு,நடுவிலுலவுநர்,வீரர்சங்கணி,யாறரெம் பெரு, மான்வணங்கிய, பாதர்மகேசர்.

மாந்தர்முன்புசெய் பாவங்களினல், வருந்துயர், நீண்டவெம்பசி நோய் வெங்கலிநோய், பயந், தகன், றிடும்படி,ஞானபோதனை,காரிசேய் நிதி, சேரும்வாழ்வருண், மாதபோதன, ருலகமிசைசில, மனுடர்மெலி வுற, வவதிசெயவரு, பிணிகளெதுவும, காதவஞ்சனை, யேயிதென்றும, டாமலன்பரை, யாளும்வைபோகர்.

தேர்ந்து நன்றறியா வம்பர்கண்மே, னறுந்தமிழ், யான்பகர்ந் திடை யாதென்கவியே, தினம், புனைந், துசெம்பொரு, ளாடையாபர, ணுதிபாலன, மேடைவீடுகள், சாலிசேர்வய, னிலைமைபுலமையு, முலவு சிவிகையு, முதவியதுதின, மெனதுமரபினர், வாழவும்பள, மீறுசம்பள, நாளுமன்புட, னேதருத்யாகர்.

சோதிசேர்மருடமணிசிரசினர். (வரு)

## ச-ஆவதுகலை.

தேம்பொருந்திய மாவுஞ்செறிபூ, கமழுந்தளிர், வேங்கைவிண்படர் நீள்சந்தனமால், கடம், புடன், செருந்திக, ஞாவல்பாதிரி, மேவுசோலையி, லேறிவானர, யூதமீதிகல், புரியவுலவிய, பலவிலுறுகனி, சிதறிவிரிவதி, லொழுகிவருநற,வாழைபிஞ்சிகு,லாவுமஞ்சளின்,மேடுசென்றடர், சாலி யின்மோதி.

மீண்டுவண்டுகள் சேர்பங்கயமார்,குளம்புக,மேய்ந்திடும்பக டாலங் குவரால்,வெருண்,டெழுஞ்,சினந்தனின், மேதிகாலடி, யூடுபோய்வெடி, தாவவேபல, சேவல்பேடையை, நெடியசிறைகொடு,தழுவவயலுறும், வளைகளுலவுரல், வளமைபெருகிட, வேதமுந்திகழ், வேள்வியுந்தெரு, வீதிதங்கவெ, நேரமுமாலை.

சேர்ந்ததென்குருகூர் வந்தருள்நூர்,பரம்பொருள்,வாய்ந்ததண்புளி சேர்மண்டபமீ, தலங், கிர்தங், துலங்குவி, மானநீண்மதின், மேவுகோயி லில், வாழ்தயாநிதி, யானதேசிகர், கருணைபொழியிரு, கமலவிழியினர், வகுளமணமல, ரணியுமழகினர், காரிநங்கைகு, மாரர்வண்சட, கோபர் செண்பக, மாறர்விசாகர்.

தோகையாடியபொதியவரையிலே. (இ)

## ரு-ஆவதுகலை.

கூந்தல்வண்டினமோ தண்டலையோ, முகங்குளிர், தோய்ந்தசந் திரனோ பங்கயமோ, மடந், தைகண், களம்புய, மோகபோலமெய், சாணையோசிறு, நாசியோகுமி, ழோசொல்காரிகை, புருவநெளிசிலை, திருவைபனையகல், வனிதைதிருநுதல்,ஒளிசெய்பிறையிது,காதுநங்கை யர், சேனையங்கச, னேறுமுஞ்சலி, தோவிவள்வாய்செவ்.

ஆம்பலென்பதுவோ தந்தமெலா, முருந்துக,டேன்குழம்பமுதாய் மண்டிதமிழ, தயங், குயிஞ், சுகந்தவ, ரோசொல்வாய்மொழி, சினியோ பகர், பாதமோதளிர், நாபிபூமகிழ்,மிடறுவரிபெற,கமுகுகடிதட,நெடிய சிலைமதன்,முழுகுதடமது,தோள்கரும்பிணை,யோகன்முன்கைகள்,யாழ் விளம்புப, யோதரமோது.

கோங்கரும்பிளநீர் பம்பரமோ, வுடம்புபொன், வாய்ந்தசெண் பகமோ வெண்சொலுவே, னரம், பைரஞ், சிதந்தரு,வாலகோகில், மாது

மேனகை, தேவமோகினி, நேசயூாமயி, லரிவைமடவியர், திலகமுருவசி, யிளையர்முனிவரு, மருளுவடிவினள், பூவைசுந்தரி, மோகவஞ்சிவ,சிகரந் தரு, வேள்கலியாணி.

கோதிலாவெனதிருகண்மணியினுள். (இரு)

சு-ஆவதுகலை.

கூண்டதங்கமளா வுஞ்சுவர்தோய்,பளிங்கறை, தோன்றுபஞ்சணை மேல்விர்ந்தையினு, ளடந்,துவங்,கிருந்தவள்,சிர்விடாதொலி,வீணைநீவிவ, ராடிதோடிமு, காரிபாடிய, விசையிலுரைகிளி, மொழியிலெனதுள, முருகியிகுமயல், பெருகியவன்முன, மேவிநின்றுச, லாயிடும்பொழு, தாசைகொண்டவ, ளுனெனவோதி.

நேர்ந்ததின்றல வோவந்ததட, பலன்பெற, யான்சொல்பண்பது கேள் பெண்கொடியே, சுகந், தமஞ், செனுங்குழல், சூடவோகர,மீதிலே வளை, பூணவோசுரு, ளியவோவுன, தடிமையெனமுறி, யெழுதிடெனி லவண், முறுவல்புரியவென், மனதுநிலையில, தேயஞ்சொலி, நீள்கருங் குழல், கோதுமுன்பரு, ளாகியபார்வை.

கூர்ந்தபின்பினிதாய் நெஞ்சதிலே, நயம்பெற, வேண்டுதண்பனி நீர்சந்தசவா,துருங்,குமங், கலந்தணி, வாளநேசுப்ர, காசமாமணி, மாலை வேயென, மார்பமுடிய, துகிலைநெகிழ்தர, விடுவள்குவிதனமுனையை நெருடென, நவில்வண்மடிமிசை, யேசரிந்துவி, டாதுகொஞ்சுவள், சினி தங்கித, மீவள்குழாய்வள்.

கூடவோருயிரெனமெய்பிரிவிலாள். (ரு)

எ-ஆவதுகலை.

காந்தளங்கையினு லன்புடனே, பொருந்திமெய், சேர்ந்தணைந் ததிலே யிங்கிதமா, யிணங், கனங், கனந்தவி, காரமீறமு, ஞேதிநேர்சிர, மார்புலாவுகை, மூலமீதுகிர்,பதியவொருகர,மரவபடமணி,தடவுகரிகர, மதிகசுகநய, மாகவம்பர, மானகண்களை, நாவளைந்துது, ளாவியவேளை.

தான் குனிந்தணைவாணின்றணைவாண், மலர்ந்தொரு, பாங்கிருந் தணைவாளங்கதனே, ரெனுங், திறம், புனைந்தவ, தானமாவினை, யாடு கோரள, லீலைகூடிம, லாடியேபல, காணவகைசெயு, முபரிமுறைய வண், மருவுதொழில்செய, வுனது நினைவெது, வாவதென்றுவை, வாண்முனங்குவண், மேன்முரண்டுசெ, யாதுறவாவள்

காஞ்சனந்திகழ் கோலக்குலையா, முகக்கவுண், மோந்துசெங்கை யினுன்மென்சுருடா, வெனும், பகிர்ந், துதின்றனு, கூலமாவெனே, மேவபோதுடல், சோகதாகமு, ருமணீமயில், விசிறிகொடுவிசி, றெண மெய்புகலுவள், சரசவகையொடு, துகிலையுரிகுவள், காவிரண்டிடை, நேர்நெருங்கவி, டாதுகொண்டணே, வாள்பரிவர்வள்

நீதியாவிரவில்விழிதுயிலுருள். (௫௫)

௬-ஆவது கலை.

கான்பொதிந்தவசோகந்தளவோ, துகஞ்சமொய், தேன்பொதிந்த கலாரஞ்செறிரு, தமென், றபஞ், சவெங்கணே, வேள்சபாசென, வாது கூறிவி, டாமல்வீறொடு, தேடிநேர்பொரு, கலகமிடுவதி, விலகுமிருகர, முலவுவளேகல, கலெனவலறியொர், பானெறிந்திரு, பாததண்டைக, ணூபுரங்கள்க, லீரெனுநாதம்

ஒங்கவண்டுபுருவுங்குயில்கா, டையுஞ்சிகி, போந்துமஞ்சமு வீரம் பெறுகோ, ழியும், புலம், புமெண்குரல், கூவுமோசைகள் பூகமான கீர்பமீதுக, கிகி கிகிகி, கருகு கருவென, விரையைமுடிகுழ, லவிழவனே மலர், சொரியறுதன்மிசை, வேர்வரும்பமை, யூடழிந்துகண், வேன் மருண்டிட, ராகமதேற

காம்பெனுஞ்சிறு தோண்முங்கியவா, ரமுங்குழை, பூண்டசெம் பொனுமோர்பங்குபளீ, ரெனுஞ், சிவந், திடுங்கனி, வாய்வெளேறெனு, வாசமாமுக, சோபையேரொளி, கூரமாமலர், மதுவையளிநுகர், பருவ மெனமன, மகிழவிருவரு, மருவுதருணம, தாகவுஞ்சல, ராசிபொங்கிமு, னேசொரிந்திட, மேவியலீலை.

நேமிமேல்வருசுகிர்தபலனிதே. (௬)

---

தொங்கல்களைச்சேர்த்தால் ஒருகவியாகவேண்டும்.

ஆதிகாரணரடிகள்பரவுவோர், ஆவலாயடியர்பணிசரணினர்
சோதிசேர்மகுடமணிசிரசினர், தோகையாடியபொதியவரையிலே
கோதிலாவெனதிருகண்மினள், கூடவோருயிரெனமெய்பிரிவிலாள்
நீதியாவிரவில்விழிதுயிலுருள், நேமிமேல்வருசுகிர்தபலனிதே

---

இருபது வருடத்துக்குமுன் நான் ஸ்ரீவைகுண்டத்துக்குப்போ யிருக்கும்போது, ஸ்ரீ௸ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் திருவவதார மனை யில் வசித்திருந்தேன்; அங்கு சுவாமிகளுடைய மரபிலே வந்த நல்ல

குற்ருலக் கவிராயரவர்களியற்றிய வண்ணம் என்று ஒரு சுவடிகிடைத்தது. பாண்டிநாட்டிலே அக்காலத்தில், தமிழ்வித்துவான்களெல்லாம் பலவகையான வண்ணங்கள் செய்வதிலதிக சமார்த்தியமுடையவர்களாயிருந்தார்கள்; பலவித்துவான்கள் வீடுகளிலும் பலவித வண்ணங்களிருக்கின்றன; இக்காலத்திலே வண்ணங்கள் செய்யுந் தமிழ்வித்துவான்களரியராயிருக்கின்ருர்கள் ஆதலாலிதுபோன்ற வண்ணங்களைப் பார்த்தாலிவ்வாறு செய்வார்களென்றெண்ணி மகாமாட்சிமைதங்கிய சேதுபதிரெகுநாததளவாயவர்கள் வண்ணத்தையச்சிட்டபின், இவ்வண்ணத்தையும் பரிசோதித்து, எழுதுவோராலே நேர்ந்தவழுக்களைந்து, அரும்பதவுரையுமெழுதி வெளியிடலாயினேன்.

## அரும்பதவுரை.

### க-ஆவதுகலை.

வாவி—தடாகம்.
ஆழி—சக்கரம்.
கரா—முதலை.
மாமன்—என்றதுகஞ்சனை.
வண்டில்—அசுரனுகிய சகடம்.
காஞ்சனன்—இரணியன்.
உகிர்—நகம்.
மதலை—தூண்.
எயிறு—பல்.
பாந்தள்—அரவு.
சம்பரமம்—மகிழ்ச்சி.
தவிசு—அணை.
முனி—விசுவாமித்திரமுனி.
சிலை—வில்.
இந்திரை—இலக்குமி.

### உ-ஆவதுகலை.

எண்கணர்—பிரமதேவர்.
காரியார்—பிதாவின் பெயர்.
உசிதம்—தகுதி.
மதலை—பிள்ளை.
குறுங்குடிநம்பி— திருக்குறுங்குடிநம்பியென்னும் பெருமாள்.
சொம்பு—கூட்டம்.
விண்டு—திருமால்.
ஆயிரம்—என்றது முதலாயிரத்தை.
போதர்—ஞானத்தர்.
புங்கவர்—உயர்ந்தவர்.
மோனமனேலர்—மௌனமனத்தார்.
பொருளூல்—என்றது தாம்விடுத்த கவியிலுள்ள அகப்பொருணூற்கருத்தை.
மனோரதம்—இன்பம்.
ஒருகவியென—பலருஞ்செய்த கவியெல்லாமொருகவியெனவாக.
பான்மை—தன்மை.
மொய்ம்பு—தோள்.

### ௩-ஆவதுகலை.

ஓதிமம்—அன்னம்.
வாஞ்சை—விருப்பம்.
எழில்—அழகு.
கேசவர்—திருமால்.
முருடு, துடி, தவில், முழவு—இவை வாத்தியவிசேடம்.
சங்கணியாற்ர்—பொருநை நதியின் றுறையார்.
எம்பெருமான்—என்றதுராமாநுசரை.
சேய்—பிள்ளை.
நிதி—திரவியம்.
தபோதனர்—தவமாகியதனத்தையுடையவர்.
அகாதவஞ்சனை— மிக்கவஞ்சனையென்பது கருத்து.
வைபோகர்—விபோகர்.
இடைதல்—வருந்தல்.
சாலி—நெல்.
புலமை—அறிவு.
உம்பளம்—வெகுமானம். வெகுமானமாகக்கொடுக்கு நிலமென்றுங்கூறுவர்.

ச-ஆவதுகலை.

தேம்—தேன், வாசனை.
பூகம்—கமுகு.
வானரயூகம்—வானரமாகிய குரங்கு ஒருபொருட்பன்மொழி.
நறை—தேன்.
பங்கயம்—தாமரை.
பகடு—எருமைக்கடா.
மேதி—அவ்வெருமைக் கடாவைச்சுட்டியது.
சிறை—இறகு.
குருகூர்—ஆழ்வார்திருநகரி.
வகுளம்—மகிழம்பூ.
காரி—பிதாவின் பெயர்.
நங்கை—காரியார் மனைவியாராகியவுடைய நங்கையார்.
செண்பகமாறர்—என்றதுமொருபெயர்.
விசாகர்—என்றதுமொருபெயர்.
தோகை—மயில்.
பொதியவரை—பொதியமலை.

ரு-ஆவதுகலை.

தண்டலை—சோலை.
அம்புயம்—தாமரை.
கபோலம்—கன்னம்.
சாணை—சாணைக்கல்.
குமிழ்—குமிழம்பூ.
வனிதை—பெண்.
நுதல்—நெற்றி.
அங்கசன்—மன்மதன்.
உஞ்சல்—ஊஞ்சல்.
முருக்கு—மயிலினிறகடிக்குருத்து.
கிஞ்சுகம்—முருக்கம்பூ.
துவர்—பவளம்.
நாபி—கொப்பூழ்.
மிடறு—கழுத்து.
கடிதடம்—அல்குல்.
பயோதரம்—கொங்கை.
இரஞ்சிதம்—இன்பம், பிரியம்.
கோகிலம்—குயில்.

சா-ஆவதுகலை.

கூண்டுதல்—கூடுதல்.
சலாம்—வந்தனம் - துலுக்குமொழி.
சுகந்தம்—நன்கு மலரெங்க.
மஞ்சு—மேகம்.
சுருள்—வெற்றிலைச்சுருள்.
முறுவல்—சிரிப்பு.
வெய்தல்—சுடுதல்.
துகில்—ஆடை.
நவில்வன்—சொல்வன்.

எ-ஆவதுகலை.

ஓதி—கூந்தல்.
கைமூலம்—கையடி.
உகிர்—நகம்.
அரவபடம்—என்றது அல்குலை.
கரிகரம்—என்றது கரிகரலீலையை.
கேரளம்—மலையாளம்.
உபரி—மேல்.
காஞ்சனம்—பொன்.
பரிவு—அன்பு.

அ-ஆவதுகலை.

தளவு—முல்லை.
கஞ்சம்—தாமரை.
கல்லாரம்—என்றது நீலத்தை.
நூபுரம்—சதங்கை.
சிகி—மயில்.
போத்து போக்கென விகாரமாயிற்று.
போத்து—செம்போத்து.
அஞ்சம்—அன்னம்.
கிரீபம்—கழுத்து.
வனைதல்—அணிதல்.
இராகம்—சிவப்பு.
காம்பு—மூங்கில்.
கூர—மிக.
அளி—வண்டு.
கோமி—பூமி.
சுகிர்தம்—புண்ணியம்.

## செந்தமிழ்

### வண்த்தியல் வெண்பா

எட்டுக்கலையாயிடையிட்டெதுகையாய்
கட்டுக்கலைக்குழுக்கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலுமாகித்தொடையும்பலவாகிப்
பங்குபெறும்வண்ணத்தின்பண்பு.

### அகவல்

முதற்கலைக்கிடுவதுதெய்வச்செயலே
யிரண்டற்கிடுவதுகிளைகொடைவிருது
மூன்றற்கிடுவதுபுகழும்வாகையு
நான்கற்கிடுவதுநாடுநகரமு
மற்றைப்பாதிறற்றுயிரங்கல்
கலவியின்மகிழ்தலுங்கழறுவர்வண்ணமே
வேறுதுறையினும்விளம்புவர்புலவர்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
ரா. சுப்பிரமணியக்கவிராயர்

மாட்சிமைதங்கிய

## தளவாய் ரெகுநாதசேதுபதியவர்கள்மீது வண்ணம்.

*தந்தானத்தன தந்தானத்தன தந்தானத்தன தனதானன, தத்தன தத்தன தத்தன தத்தன தத்தன தத்தன தனதானன.*

வங்காரக்கிரி சிங்காரத்தொடு சங்காரச்சிலை யெனவேயொரு கைக்குள் வளைத்தொரு கைக்குள்வடிக்கணை முப்புரம்வெப்பெழ விடுவார் மிசை

செம்பாதிக்கொரு வெண்பாதிப்பிறை சம்பாதித்தொரு முடிசூடினர் பத்திரதத்தன் விசித்ரனெனத்தகு புத்ரனருச்சனை புரிதாளினர்

வண்காசிக்கதி கஞ்சேதித்தல மிங்கேகித்தலு முறைவோமென மைக் கண்மடக்கொடி முக்யபருப்பத வர்த்தனியுத்தமி யுடன்வாழ்பவர்.

### தொங்கல்.

ராமநாயகரைமுற்றுநம்பினேன். (௫ கலை)

வங்காளத்திலி ருந்தேசெச்சையில் வந்தார்கொற்றவர் சிலபேர்சிலர் மக்கர்துருக்கர்வ ரத்தடைபட்டும ணிக்கடைநிற்பர்கள் சிலபேர் சில

பொன்காணிக்கைகொ ணர்ந்தோமிப்பொழு தென்றார்குச்சரர் சில பேர்சில கோப்பையடித்தது பட்டுமுடித்தலை ரத்னமுதிர்ப்பர்கள் சிலபேர்சில

மன்றாடிச்சொலி நின்றாரிட்டனர் கன்றானைத்திரள் சிலபேர்மிகு கப்ப வழக்கநடக்கைதரச்சொலி யொப்பமிடச் சொல்வர் சிலபேரென.

ராசகாரியநடத்துநங்கண்மால். (வ கலை)

செங்காவிக்குடை யுங்காவிக்கொடி யுங்காவிச்சிவி கையுமாய்விரு தொக்கவரத்துரை மக்கள்வரப்படை பக்கம்வரப்பொரு கணை மீதெழு

செந்தூள்பட்டிரு சந்த்ராதித்தர்ம றைந்தோடத்திரி யலர்பேரணி தட் டழியப்பரி பட்டழியக்கரி செத்துருளச்சமர் பொருதேர்பரி

செண்டாட்பகை கொண்டாரைத்தலை பந்தாடப்பெரு நரிபேயுண
ரத்தசலத்தைதர ணப்பலியிட்டுர ணக்கொடிகட்டிய ரணகேசரி.
வாமமார்குழலியர்க்குவந்தவேள். (வஙு கலை)

செம்பாக்தொடு சொம்பாகக்குயில் பண்பாடச்செய லொருபான்
மயில் வட்டம்ணிச்சிறை விட்டுநடித்திடு கட்டளைசேக்கணி யொரு
பாலளி

கொண்டாடப்பல வின்கோலச்சுளை பொன்போலப்பெய்வ தொருபா
லுயர் பச்சைமடற்கமு குச்சிதுளக்கிவெண் முத்தமுகுப்பன
வொருபால்வளர்

செந்தேன்வைத்தப சுங்காமொய்த்திடு தென்றேவைந்துரை தளவாய்
தரு சித்தசனுத்தமன் முத்தமிழ்வித்வச னத்தைவ, ளர்த்தவன்
ரெகுநாதமன்.
மாரிநீரருவிசுற்றுகுன்றின்வாய். (இ கலை)

சங்கீதக்கிளி வந்தாள்சற்றெல்கி நின்றாளுப்பரி கையின்மேல்வள
ரொப்பனையிட்டொரு சற்பனையிட்டிரு கட்கடையிட்டவள் மணி
மார்பிலெ

மூங்தேகுத்தம தம்பாய்வெற்பைவி ரைந்தேதொட்டி னுடன்மேல்
விழ வைச்சதுவர்ப்பிள வெச்சில்வகைச்சுருள் வைத்ததுதுய்த்
தனு மவளேயிதழ்

தந்தாளிப்படி யுண்டோபற்பு மென்றாள்சொற்படி மெலவேமெல
முத்தமளித்தும டிக்குளிருத்திமு லைக்குளணைத்தொரு கைபனீ
ரென.
சேமமார்தருமுழக்கமண்டவே. (இஙு கலை)

சஞ்சீவிப்புற வுங்காடைக்குல மும்பேடைக்குயின் மயில்பேரளி
குக்கிலனத்தொடு குக்குடமெட்டுவ கைப்படுபுட்குரல் வரவேமன

துஞ்சோரத்துகி லுஞ்சோரக்குழ லுஞ்சோரப்பர வசமாயுளு ருக்கி
யுருக்கிம ணித்தொடையொக்கநெ ருக்கிநெருக்கிமன் மதனுமொரு

சந்தோடத்தெய்வம் வந்தேறிச்சன தம்பேசிப்புள கிதமாய்ம்லி கைத்
தொடைபிச்சி மருக்களபப்புள கிப்பொருநற்பரி மளம்வீசிய.
சீதவீயிலகுசப்ரமஞ்சமேல். (ரு கலை)

அங்கோசிற்றிடை யிங்கோசிற்றிடை யெங்கோபற்றிட மெனமாயமெ
னப்பநறிப்பத றிக்கதறித்துவ ளத்துவளப்பரி புரமோலிட

முன்போகித்தது பின்போகித்தது சம்போகத்தினி லறியாமன்மயக்கம்
வரத்தழு வித்தழுவிப்புண ரப்புணரப்புது நலமாகியி

ரண்டாகத்துயி லொன்றாகத்தய வொன்றாகச்சிறு பிறையாகிய நெற்றி
வியர்த்தொரு சற்றவசக்களை நித்திரைமெத்தையில் வரவேயுடன்.
காமமீறியமுயக்கிலன்றில்போல். (ஞு கலை)

அன்பாகத்தொழி லின்பாகச்செய்து முன்பாகப்பொரு மிருபார்வைம
யக்கமயக்கிவ ருட்டிவெருட்டியி தத்தறிவைத்திறை கொளவேயமிர்

தம்போலக்குதி கொண்டேசித்தச னன்போடொத்தெழு சலராசிய
ணைத்தலைதத்தியு டைத்தபெருக்கின்ம ணத்தைவிடற்கொரு
கதியேதென

வெண்காயக்கமு முன்காயக்கமு மின்றேயுத்தியி னன்றாகப்பெரி தறி
வோமென் மெச்சொரு வர்க்கொரு வர்க்கதிகப்பட விச்சைகொ
ளச்செய்த சுகலீலையே. (௧ கலை)

காதலாய்மிகநினைக்குநெஞ்சமே.

## தொங்கல்களைச்சேர்த்தால் ஒருகவியாகவேண்டும்.

ராமநாயகரைமுற்றுநம்பினேன், ராசகாரியநடத்துநங்கண்மால்
வாமமார்குழலியர்க்குவந்தவேள், மாரிநீருவிசுற்றுகுன்றின்வாய்
சேமமார்தருமுழக்கமண்டவே, சிதவியிலகுசப்ராமஞ்சமேல்
காமமீறியமுயக்கிலன்றில்போல், காதலாய்மிகநினைக்குநெஞ்சமே.

இளையாளன் சேது பதிரெகு நாயகன் கிஞ்சுகவா
யிளையார் கலவி யிடத்துநம் மீச னிடத்துமன்றி
வளையாத பொன்முடி சற்றே வளையு மகுடமன்னர்
தளையாடி நொந்தகை காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.

இக்கவி, இவ்வண்ணத்தின்பின் வரைந்திருந்தது. இவ்வண்ணஞ் செய்தவர் ஊர், பெயர், காலமுதலியன விளங்கவில்லை. எழுதுவோராலே நேர்ந்த பிழைகள் புலவாயிருந்தன, அப்பிழைகளாற் சந்தச்சிதைவாயினபடியாற் சந்தச்சிதைவும் பொருட்சிதைவுமில்லாத

படி யென்னறிவிற்கியன்றபடி திருத்தி வெளியிட்டிருக்கிறேன்; இதனினுஞ் சுத்தமானபிரதிகிடைத்தாலடுத்த செந்தமிழில் வெளியிடலாகும்.

## அரும்பதப்பொருள்.

வங்காரம்—பொன்.
பத்திரதத்தன்—தசரதன்.
கொப்பு—கொண்டை.
கப்பம்—அரசிறைப்பொருள்.
தரியலர்—பகைவர்.
இரணம்—போர்.
செக்கணி—சண்டையினடம்.
சிங்கைச் சிலேடை வெண்பாவிலே, "மிக்கசிறைமயிலு மென்பயிர்க்குத் தீம்புனலுஞ் - செக்கணியாடிக்களிக் குஞ்சிங்கையே"எனக்கூறியிருத்தல் காண்க.
சற்பனை—வஞ்சனை.
அளி—வண்டு.
துவர்ப்பிளவு—பாக்குப்பிளவு.
சன்னதம்—ஆவேசம்.
சம்போகம்—புணர்ச்சி.
வருட்டி—வற்புறுத்தி
சலராசி—சலக்கூட்டம்.
காயக்கம்—மோகமயக்கு; மருட்டுவித்தை யெனவும் வழக்குண்டு.

### வண்ணத்தியல் வெண்பா.

எட்டுக்கலையாயிடையிட்டெதுகையாய்க்
கட்டுக்கலைக்குமுக்கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலுமாகித்தொடையும்பலவாகிப்
பங்குபெறும்வண்ணத்தின்பண்பு

### அகவல்.

முதற்கலைக்கிடுவதுதெய்வச்செயலே
யிரண்டற்கிடுவதுகிளைகொடைவிருது
மூன்றற்கிடுவதுபுகழும்வாகையு
நான்கிற்கிடுவதுநாடுநகரமு
மற்றைப்பாதிநற்றுயிரங்கல்
கலவியின்மகிழ்தலுங்கழறுவர்வண்ணமே
வேறுதுறையினும்விளம்புவர்புலவர்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீன வித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

# மேலாய்க்குடித் தமிழபிவிருத்திக்கந்தவேள் சங்கத்தைந்தாவதாண்டின்

# வருடக்கொண்டாட்டம்.

சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும், சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனும், சங்கப்புலவருந்தழைத்தினிதிருந்த மங்கலப் பாண்டிவளநாட்டில், பலவளங்களுநிறைந்து தமிழபிமானிகளுக்குறைவிடமாய் விளங்கும் மேலாய்க்குடியென்னும் ஊரின்கண், நமது மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஹிஸ்ஹைனஸ் ஹானரபில் ராஜராஜேஸ்வரதுரையாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்களைப் போஷகராகவும், அவர்களது அருமைமைத்துனர் ஸ்ரீமத் எம். வேலுச்சாமித்தேவரவர்களை அக்கிராசனாதிபதியாகவும் அடைந்து அரும்பெரும்பாக்கியங்களைப்பெற்றுவளரும் இச்சங்கம், தன்றுப்பலவகைப்பட்ட துறைகளினுஞ் செழிப்புற்று, எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் சென்ற நவம்பர்மீ 16, 17உ களில் சோதுகுடி எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர் சாஹிப்பஹதூர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஷை மேலாய்க்குடியைச்சார்ந்த திருச்சண்முகபுர விஜய மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றதானது தமிழகத்துக்குப் பெருமகிழ்ச்சி தரத்தக்கதே. இவ்வைந்தாவதாண்டு நிறைவைக் கொண்டாடிக் களித்தற்பொருட்டு இச்சங்கத்தினங்கத்தினரும் ஏனைத் தமிழபிமானிகளும் பலவிடங்களினின்றும் தந்தம் தேகசிரமத்தை யொருசிறிதும் பாராட்டாது வந்து சபையில் ஒன்றுகூடியளித்த அற்புதக்காட்சியானது தங்கள் தாய்மொழியும் தனிமொழியுமாகிய தமிழபிவிர்த்தியில் அன்னவர்கட்குள்ள பேரபிமானத்தைக் காட்டியதோடு, இச்சங்கத்திற்கு இனியுண்டாகும் பேரபிவிர்த்திக்கும் பெருமைக்கும் அறிகுறியாகவும் தோற்றிற்று. இத்தகு சிறப்புப்பெற்ற வித்வக்கழகத்தின் முன்பு (1) இரசாயனம் (2) வியவசாயம் (3) மனமடக்குமுறை (4) ஒற்றுமை (5) பரோபகாரம் (6) பக்தி (7) வாய்மை (8) நன்றிமறவாமை (9) அறம் (10) தமிழ்மொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும், என்னும் அரியவிஷயங்களைப்பற்றி கனம் V. காசிவிஸ்வநாத பிள்ளையவர்கள் (1) கனம் எம். கே. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் (2) ஸ்ரீமத் A. சுந்தரராஜஐயங்கார் அவர்கள் (3) கனம் இரங்கசாமி

பிள்ளையவர்கள் (4) கனம் கண்ணுசாமிபிள்ளையவர்கள் (5) கனம் P. சிவசாமிசேர்வையவர்கள் (6) கனம் V. காசிவிஸ்வநாதபிள்ளையவர்கள் (7) கனம் மாணிக்கவேலுபிள்ளையவர்கள் (8) கனம் சிவஞானம் பிள்ளையவர்கள் (9) கனம் P. சிவசாமிசேர்வையவர்கள் (10) என்னும் தமிழறிஞர்கள் முறையே "கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க்கேளாரும்-வேட்பமொழிவதாம்சொல்" என்ற பொய்யாமொழிக்கிலக்காய், சுருக்கமாயும் இனிமையாயும் பிரசங்கித்தனர். அன்னவர்களது பிரசங்கமுடிவில் சபாநாயகர் மேற்கண்ட ஒவ்வொருவிஷயங்களுக்குமுரிய தமது அபிப்பிராயத்தைப் பற்பல மேற்கோள்களுடன் நன்குவிளக்கிக் காட்டிச் சபையைக் களிப்பித்தனர். முடிவில், சபாநாயகரவர்கள் அடியிற்குறிப்பித்துள்ள மங்களவாழ்த்து அகவற்பாவை வாசித்துப் பல்லாண்டுகூறி நமது இந்திய சக்கரவர்த்திப் பெருமானும் பிரிட்டிஷ் மன்னருமாகிய ஜியார்ஜ் அரசருக்கும், செந்தமிழ்வளர்க்கும் சிறப்புறு வள்ளலும் சேதுபதிமன்னர்பிரானுமாகிய மாட்சிமைபொருந்திய ராஜராஜேச்வரதுரையாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கட்கும், இச்சங்க அக்கிராசனாதிபதியாகிய செந்தமிழ்ச்செல்வர் ஸ்ரீமான் எம். வேலுச்சாமித்தேவர் அவர்களுக்கும், முறையே மும்மூன்று வந்தனஞ் செலுத்தி ஆனந்தகரகோஷத்துடன் தமதாசனத்திலமர்ந்தனர்.

சங்க அக்கிராசனாதிபதியவர்கள் சபாநாயகருக்கு வந்தனோபசாரம் வழங்கி, சபையோர்கட்கெல்லாம் சந்தனபுட்பதாம்பூலமளிப்பிக்கச் சபையோர் மிக்க மனக்களிப்புடன் தத்தமிருக்கைக் கெழுந்தருளினர்.

## மங்களவாழ்த்து.

பூவுலகத்திற்புண்ணியமிகுத்ததென்
றேவரும்புகழவின் றும்வழங்கும்
பரதகண்டத்திற்பன்னலம்பழுநிய
வரமலிபாண்டிவளநாடதனில்
கூடலம்பதியின்குணதிசையகத்துச்
சீர்சால்சிறப்புமேர்சால்வளனு
மலைபடுபொருளுமலைபடுபொருளுங்
காடுபடுபொருளுநாடுபடுபொருளு
நகர்படுபொருளும்புகாறச்செறிந்து
தலைமயக்குற்றநிலைசால்வளனும்
அளவிலாப்பொருளுமளப்பரும்போகமும்

பளகிலாதெய்தியபான்மைத்தாகி
நன்னூலாயநன்னூல்பலவும்
தொன்னூல்முதலதொன்னூலனைத்தும்
ஒல்காப்பெரும்புகழ்த்தொல்காப்பியனருள்
தொல்காப்பியமும்தொல்காப்பியமும்
பல்காற்பயின்றசொல்லேருழவர்
ஒருங்குசேர்ந்திருந்தருங்கலையாயும்
ஆன்றோராதிசான்றோருடைத்தாய்
நிதிக்கோனகருநிகரிலாமுகவைப்
பதிக்கோரரசாய்ப்பாருலகுவக்கும்
நற்றமிழ்க்கூடல்நகர்த்தமிழ்ச்சங்க
முற்றியதவத்தான்முதன்மைவகித்தோன்
கல்வியிற்கம்பன்கவின்மலரம்பன்
பல்வகைத்திறனுஞ்சொல்வகையமைந்தோன்
ஆரியங்கன்னடமாங்கிலந்தெலுங்கு
சேரியல்தேர்ந்தசிறந்தபல்புலவரும்
அமிழ்தினுமினியதமிழ்மொழிக்கடலுள்
இலக்கியமிலக்கணமென்றபன்மணிகளைத்
துலக்கியநால்வகைத்தூயபாவலரும்
பகர்ந்தசெழும்பிரபந்தமனைத்தும்
உகந்தணிந்தவரவர்க்குறுபொருளுதவுவோன்
எந்தநேரமும்வந்தபாவலரைப்
பக்கத்திருத்திமிக்கசொற்கேட்டு
மனமிகமகிழும்வள்ளற்கோமான்
உத்தமோத்தமர்களுவகைபூத்தழைக்க
எத்தனையோசபைக்கிறைமைவகித்தோன்
கோதுபதியாக்குணங்குடிகொண்ட
சேதுபதிகடிலதசிம்மேறு
மன்னுபல்கவிஞர்துன்னியவறுமை
இராமலிங்ககற்றுமெங்கோன்முத்து
ராமலிங்கராஜராஜேச்வரன்
அருமைமைத்துனன்அருங்கலைவிநோதன்
மன்பெரும்புலவர்மனங்குதுகலிப்பக்
கற்பகமென்னப்பொற்புறவழங்குவோன்
வறுமைப்பிணிமுதல்வருந்துயரகற்றி
நம்பிவந்தடைந்தோர்நாடியவனைத்தும்
நிறைவேற்றிவைத்தும்நேருற்றவரை
அன்னைதந்தைபோலருள்செய்துகாத்தும்
நல்லறமானவில்லறத்துடனே
யிருந்துபல்வகைநலம்இன்பமாய்ச்செய்வோன்

# செந்தமிழ்

மண்டலம்போற்றிவழுத்துசம்பன்னன்
அரியசற்குணன்அன்புமிக்குடையோன்
சாந்தசீலன் தருமநன்னெறியினன்
திரண்முத்தரும்பிமரகதக்காய்த்துப்
பவளம்பழுத்ததிவள்பசுங்கமுகப்
பொதும்பர்புடைசூழ்ந்துததும்புசீர்வளனார்
கடிகமழ்மேலாய்க்குடிநகர்புரப்போன்
பூமிபாலகன்புரந்தரன்வேலுச்
சாமிகாவலன்றலைமைபூண்டிங்
கிம்மைச்செய்த்துமறுமைக்காமெனும்
அறவிலைவாணிகன்ஆஅய்அல்லன்
என்னப்புலவர்பன்னிப்புகழும்
வள்ளற்பெயராற்றெள்ளியமேலாய்க்
குடிநகர்தன்னில்வடிவுடன்வளரும்
கந்தவேளின்கருணைமிக்கூரும்
தமிழபிவிருத்திக்கந்தவேள்சங்கத்
தைந்தாம்வற்சரம்ஹோற்சவமாகும்
இந்நாள்நன்னாளாகுகவீண்டு
குழுமியிருக்கும்விழுமியபலரும்
பலநலம்பெருகிப்பல்லாண்டுவாழ்க
வாணர்வாழ்கவண்டமிழ்வாழ்க
மாதவர்போற்றுஞ்சேதுகாவலர்
ஞாயிற்றினொளிபோனாளும்வாழ்க
கந்தவேட்குகந்தகந்தவேள்சங்கம்
எந்தநாளுமிந்தநன்னாள்போல்
இனிதுகூண்டுநனிமகிழ்ந்தோங்குக
சங்கத்தலைவருஞ்சங்கத்தவர்களும்
பொங்கித்தழைத்துப்பொலிவுடன்வாழ்குக
தருமமீறிப்பெருவமர்புரிந்த
ஜெர்மனரசின்கர்வமழித்திவ்
வுலகெலாமேத்துமுயர்புகழ்நிறீஇய
ராஜகெம்பீரன்ராஜராஜேஸ்வரன்
வெற்றிவிக்ரமன்விஜயமார்த்தாண்டன்
ஐந்தாம்ஜியார்ஜு அரசுங்கோலும்
ஊழியூழிவாழிவாழி
எல்லாம்வல்லஇறைவன்றிருவருள்
பாலித்தருள்வான்பரவுதுமியாமே.

ஒரு செந்தமிழ்நேயன்.

கடவுள் துணை.

# பண்டைத்தமிழரசர்களதாட்சி. *

உலகத்திலே மக்களாய்ப்பிறந்தார் ஒவ்வொருவருந் தற்காலந் தத்தந் தேசத்தினுடையவும் வகுப்பினருடையவுமாகிய பண்டை †நாகரிகங்களை ஆராய்ந்தறிவதிலேயே விருப்பமுள்ளவர்களா யிருக்கிறார்கள். இங்கிலேயிற் பாரமார்த்திகஞானத்தையே பெரிதெனக்கருதியுள்ள இந்தியர்களாகியநாமும்,-நமது பண்டைப்பெருமைகளை உண்மைக்கு மாறுபாடாகத்திரித்துணர்த்தப்புகுந்த சிலபல புத்தகங்களைக்கண்டதும்,-நமது பண்டைப்பெருமைகளின் உண்மையை ஆராய்ந்தறியுமாறு சரித ஆராய்ச்சிசெய்யத் தொடங்கவேண்டிய தவசியமாயிற்று.

மனிதனாகப்பிறந்த எவனும் எல்லாத்தேசங்களின் முழுவிவரங்களையுந்தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும்,-அனைத்தையும் தெரிந்துகொள்ளவேண்டியதுதான்முதன்மையானது,-தான்பிறந்த தேசத்தின் முன்னைவரலாறுகளையேனுந்தெரிந்துகொள்ளவேண்டியது மிக அவசியமானதொன்றும். ஆதலின், நாமும் நமது தாய்நாடாகிய தண்டமிழ் நாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியதொருதலையாகின்றது.

நிற்க, ஒருதேசத்தினுடைய அல்லது ஒருவகுப்பினுடைய பண்டைப்பெருமைகளை அறிந்துகொள்வதற்கு முதலிலே அத்தேசம் அல்லது அவ்வகுப்பினுடைய கல்வி, அறிவு, ஒழுக்கம், வழக்கம், உணவு, மதக்கோட்பாடு, கைத்தொழிற்பெருக்கம், வியாபாரப்பெருக்கம்,

---

* இது கும்பகோணம், கவர்ன்மெண்டுகல்லூரித்தமிழ்ச்சங்கத்திலே (14—12—17-லே) பென்ஷன் ப்ரொபஸர் ப்ரும்மஸ்ரீ K. சுந்தரராமையர் அவர்கள் தலைமையின்கீழ்க்கூடிய விசேஷக்கூட்டத்திலே செய்யப்பெற்ற உபந்யாசமாகும்.

† நாகரிகம்-கண்ணோட்டம். இப்பதம் நமது தமிழ்நாட்டிற்குப் புதுவதன்றென்பதும், வெகுகாலத்திற்குமுன்னரேயே இத்தகைய அரியபொருளில் நந்நாட்டாரால் வழங்கப்பெற்றுவந்ததென்பதும், சங்கத் தொகைநூல்களுள் முதலாவதாகிய நற்றிணைநானூற்றின் 'முந்தையிருந்துநட்டோர்கொடுப்பி, னஞ்சுமுண்பர்நனி நாகரிகர்' என்ற (௩௫௫) செய்யுளடிகளால் விளங்கும். இங்கு, இக்கருத்தையே அடியொற்றிப்பயின்று வரும் 'பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்ற (௫௮0) திருக்குறளும் அதனுரையும் உய்த்துணரற்பாலன.

அரசாட்சி ஆகிய இவற்றை ஆராயவேண்டுவது அவசியமாகின்றது; மிக்க நாகரிககாலத்தன்றி இவையனைத்தும் நன்னிலையில் அமையா வென்பது முற்காலத்தற்கால மேதாவிகளது கொள்கையாதலின்.

அங்ஙனம் ஆராய்ந்தறிவதற்கு அவ்வக்காலங்களிலே நடந்தசெய்திகளைத் தம் பின்வருவோர்க்குத் 'தெரிக்கும்வண்ணம் பண்டைப் பெரியோர்களாலே தொன்றுதொட்டு எழுதிவைக்கப்பெற்றுள்ள பழையநூல்களே போதியகருவிகளாகின்றன. இஃதெத் தேசத்தார்க்கும் ஒப்பமுடிந்த தொன்றாம். ஆதலின், அம்முறையே நாமும் நமது பண்டைத் தண்டமிழ்ச்சான்றோர்களாலே இயற்றப்பெற்றனவும், இற்றைச்சுமார் இரண்டாயிரவாண்டுகளுக்கு முற்பட்டகாலத்தே நடந்தசெய்திகளை உள்ளவாறே கூறுவனவுமான சங்கத்தமிழ்நூல்களிலிருந்து ஒருவகைபாகத் தொகுக்கலாம்.

இனி, முறையே ஆராயவேண்டுவன கல்விமுதலாய பலவுளவேனும், ஒரேகாலத்தில் அனைத்தையும் ஆராய்வது முடியாதாதலானும், ஒருவகையாவேனும் எவ்வாறு நமதுபண்டைப் பெருமைகளிருந்தன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் அவா நமக்கு மிக்குளதாதலானும், அனைத்திற்கும்ஆதியாகிய அரசாட்சியைக்கூறுமுகத்தான் ஒருசிறிது நமது ஆவல்நிறைவேறுமென்பதுகருதி ஈண்டுப் 'பண்டைத்தமிழரசர்களதாட்சி' என்ற தலையங்கம் எடுத்துக் கொள்ளப்பெற்றது.

இத்தலையங்கம், பண்டைக்காலத்திருந்த தண்டமிழரசர்களது அரசாட்சி எவ்வாறிருந்தது என்பதைத்தெரிவிக்கப்புகுந்த ஒரு கட்டுரை எனப்பொருள்படும்.

இனி, இத்தலையங்கத்தைப் பண்டைக்காலம் என்பது யாது? அக்காலத்திய அரசராவார் யாவர்? அவர்களது இயல்பு எவ்வாறிருந்தது? அவர்கள் எத்தகைய பழக்கமுள்ளவர்களாயிருந்தார்கள்? எவ்வாறு அரசாண்டுவந்தார்கள்? என்பனவற்றை ஆராயுமுகத்தான் ஒருவகையிற் பூர்த்திசெய்யலாம். இம்முறையே அடியேற்கெட்டிய வளவு சிறிது கூறுவன்.

கால ஆராய்ச்சிக்குத் தற்காலம் நம்மவர்க்கு முதற்கருவியாகவுள்ளது இறையனார்அகப்பொருளுரையிற்கண்ட முச்சங்க வரலாற்றுக்

குறிப்பே. இத்துணைகொண்டாராய்ந்த பல பெரியோர்கள் பலமாதிரி யாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அவ்வாலாற்றுள் தலைச்சங்கப்புலவ ரென முரஞ்சியூர் முடிநாகராயர் அறியப்படுகிறார். அவர் பாரத யுத்த காலத்தில் இருந்தவர் என்பது இரண்டாம் புறப்பாட்டால் விளங்கு கின்றது. பாரதகாலம் இற்றைக்கு ஐயாயிரத்து இருபதாண்டுகளுக்கு முற்பட்டதென்பது நமதுபண்டைப்புராண இதிகாசங்களாற் கண்ட உண்மை. இவ்வுண்மை இறையனார்களவியலுரையிலே காட்டப் பெற்றுள்ள வருஷங்களோடு முரண்படுகின்றது. எனினும் ஈண்டு எனது ஆசிரியரவர்கள் கூறியவற்றைக்கொண்டு ஒருசிறிது பொருத்திக் காட்டுவன். அதுவருமாறு:—

“களவியலிலே சங்ககாலங்களைக் கூறியிருக்கும் மூன்றிடங்களி லும் ‘முன், முன், முன்’ என்ற ஒருசொல்லை முறையே பெய்துகொண்டு படித்தல் பொருத்தமானது. அங்ஙனம் சேர்த்துக்கொண்டால் அது தலைச்சங்ககாலத்தைச் சற்றேறக்குறைய ஐயாயிரத்துமுந்நூறு வருஷங்களுக்கு முந்தியதென்று காட்டிவிடும். ஏனெனில், இறையனா ரகப் பொருளுரையிலே கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டிலே நடந்த யுத்தச்செய்திகள் பயின்றுவருதலின் என்க.” இவ்வாறுபார்த்தால் அது, பாரதகாலத்தில் முரஞ்சியூர் முடிநாகராயர் இருந்தார் என்ற செய்தியை உறுதிப்படுத்துகிறது. இங்ஙனமேபார்க்கக் கடைச்சங்க காலமும், பண்டையோர்நட்ட தண்டமிழ்ப்பயிர்க்கோர் கொண்ட லென்னக் குவலயத் துதித்துக், கற்போர்க்கெளிதிற் கைவரச்செய்வா, னச்சிறப்பதித்திறை மெச்சும்புகழமை, ஐயரவர்களாகு மாரியப், பெரிய ரா மஹாமஹோ பாத்தியாயப் பேராசிரியரவர்களது குறிப்பிற்கொத்து வருவதாகும். இதனால் நமது செந்தமிழ்நாடு சற்றேறக்குறைய ஐயா யிரவாண்டுகளுக்குமுன்னரேயே மிக உன்னத நிலையிலிருந்ததென் பது போதரும்.

இனி, “நளியிரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு முழங்கு தானை மூவர்”

என்றதனால் அக்காலத்திய தமிழ்நாட்டரசர் ‘சேர, சோழ, பாண் டியர்’ என மூவராவர் என்பதாம். இங்கு, வடமொழி ஆதிகாவியமாகிய

ஸ்ரீமத் வால்மீகிராமாயணமும், ஸ்ரீமத் மஹாபாரதமும், திருக்குறட் பரிமேலழகர் உரை முதலாய பிறவும் உய்த்துணரற்பாலனவாம்.

அவ்வரசர்கள், 'தங்களுக்குக்கிடைத்த பரம்பரையாகவந்த அவ்வரசச் செல்வத்தை விதிக்கடவுளாலே கொடுக்கப்பெற்றதென்றும், குடிபுரவிரக்குங் கூறிலாண்மையுடையரா யிருப்பின் அவ்வரசர்க்கு அரசாட்சி மிக்கபாரமானதாயிருக்குமென்றும், விழுமிய குணமுடையவராயிருப்பின் அவர்க்கு அது மிக்கநோய்தாயிருக்குமென்றும், குடிபழிதூற்றுங் கோலராக இருத்தல் கூடாதென்றும் எண்ணியிருந்தார்கள் என்பது அறியக்கிடக்கின்றது. இங்கு 'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென' என்ற முதற்குறிப்புள்ள சோழன் நலங்கிள்ளி என்பானது புறப்பாட்டும், 'பொருந்திய, என்னிழல் வாழ்நர் செல்நிழற் காணாது, கொடியனெம்மிறையெனக் கண்ணீர்பரப்பிக், குடிபழிதூற் றுங்கோலேனாகுக' என்ற பாண்டியன் நெடுஞ்செழியனது புறப்பாட்டடிகளும் ஆராயத்தக்கன.

அவர்கள், அருளும் அன்பும் நிறைந்த பெரியோர்களது சேர்க்கையையே பெற்றிருந்தார்கள். தங்களுடைய முன்னோர்கள் பின்பற்றிவந்த நீதிநூல்களையும் பிற அறிவுநூல்களையுங் கற்றுவந்தார்கள். யாகாதிகருமங்களைச் செய்துவந்தார்கள். தக்கார்க்குத் தக்காங்கீத்துவந்தார்கள். இத்தகைய பொதுத்தொழில்களோடு ஆயுதப்பயிற்சி, பகைவரைவாட்டல், குடிகளைக்காத்தல் ஆகிய சிறப்புத்தொழில்களினும் வழுவாதிருந்தார்கள்.

அவர்கள், நல்லறிவாளர்களது சேர்க்கைபெற்றிருந்ததனால் சபையிலேபேசப்பெறும் அரியவிஷயங்களையும் அறியவல்ல புத்திசக்தியுடையவர்களாகவும், விரைவிலே முடிக்கவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதிற் சோம்பலில்லாதவர்களாகவுமிருந்துவந்தார்கள். அன்றியும், அன்னார் தங்குடைக்கீழ்வாழுங் குடிகளை எவ்வகைத்துன்பமும் அடையாவண்ணம் உயிர்போலக் காத்துவந்ததோடு அவர்கள் மாட்டுச் சந்திரனைப்போன்ற கருணையும், மேகத்தைப்போன்ற வண்மையுமுள்ளவர்களாயிருந்துவந்தனர்.

ஒவ்வொரு நாளின் பகற்பொழுதையும், முதற்பத்துநாழிகைகளைப் பெரியோர்பாற் பலவகைப்பட்ட அறவுரைகளைக் கேட்டலாலும்,

இடைப்பத்துநாழிகைகளைத் தம்மைக்காணவந்த பரிசிலர்க்குவேண்டு வனவற்றைக்கொடுத்தல், விருந்தினர் சுற்றத்தார்முதலியவர்களுடன் உண்ணல் ஆகியவற்றைச் செய்வதாலும், கடைப்பத்துநாழிகைகளை மந்திரிமுதலாயவர்களுடன் அரசாட்சி சம்பந்தமான ஆலோசனைகளைச் செய்வதாலும் போக்கிவந்தார்கள்.

பால் தன்னினிப்புமாறிப் புளிப்பினும், சூரியன் தன்னொளிமாறி இருளினும், நான்கு வேதங்களின் ஒழுக்கம் வேறுபடினும் தங்களது இயற்கை அறிவினின்று சிறிதும் வேறுபடாதவர்களும், அரசன் தவறிய காலத்தில், அவன் தம்மை மதிப்பதற்காக,—அவன் சொல்வதையே 'சரி சரி' என்றுகூறித் தங்களுடைய கடமையை மறவாது அப்பொழுதே அவனுடைய தவற்றை எடுத்துக்காட்டி இடித்துரைத்து அவனைத்திருத்தக் கூடியவர்களும், முக்காலங்களையும் முன்னருணர்ந்து நன்கு ஆராய்ந்து உறுதியாயினவற்றைக் கூறுகின்றவர்களும், நால்வகையுபாயங்களையும் இடமறிந்து காலமறிந்து உபயோகிக்குஞ் சதுரர்களுமாகிய உத்தமமந்திரிமார்களென்னுஞ் சுற்றத்தாரைப் பெற்றிருந்தார்கள். ஏனைய படை, குடி, கூழ், நட்பு, அரண் ஆகிய ஐவகை உறுப்புக்களை ஒருங்கேபோற்றி வந்தார்கள்.

மந்திரிமார், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர் என்ற எண்பேராயத்தை யுடையவர்களாயிருந்தார்கள். (இது, தற்காலத்திலுள்ள சட்டசபையைப்போன்றதுபோலும்.)

மந்திரிமார், புரோகிதர், ஒற்றர், சேனாபதியர், தூதர் ஆகிய ஐம்பெருங்குழுவையும் பெற்றிருந்தார்கள். (இது, தற்காலத்திய நிர்வாக சபையைப்போன்றதுபோலும்.)

இத்தகைய பெரியோர்களுடன் கலந்தே அரசாண்டுவந்தார்களாகையால், அவர்கள் தங்களது நாட்டிலுள்ளோர் எவ்வகைத்துன்பமுமின்றி இனிது வாழ்வதற்காகவும், செங்கோல்கோடாது நடைபெறுவதற்காகவும் தம்மிடம்வந்து முறைகூறுவோர் அனைவர்க்கும் எளிதிற் காட்சிகொடுத்து அவர்களோடு அளவளாவி இனிமையாகப்பேசி அன்னோர் கூறிய அனைத்தையும் முற்றக்கேட்டுத் தீரஆராய்ந்து தக்கது செய்து வந்தார்கள்.

தங்களிடத்தில் ஏதேனும் வழக்குவருமாயின் அவ்வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களைக் கவனித்து 'இவர் நம்மைச்சார்ந்தவர் ஆதலின் இவரது குற்றத்தைப்பொறுத்து இவரை மன்னித்தல்வேண்டும். இவர் நமக்குப்புறம்பானவர் ஆதலின் இவரது குணத்தையுங் குற்றமென்றுரைத்தல் வேண்டும்' என்று எண்ணிக் கோல்கோடாது துலாக்கோல் போல நடுவுநிலைமையிலேயே நின்று நீதிசெலுத்திவந்தார்கள். இங்கு, மந்திரிமார்களாற் பலவழிகளாலுங் குற்றமற்றவனென நிரூபிக்கப்பெற்றும் அதற்குடன்படாது தனது ஒரேமகனைத் தேர்க்காலிலிட்டறைக் கத்துணிந்த மனுச்சோழன் சரிதமும், உண்மையையறிவான் தட்டிய குற்றமற்ற தனதுகையைக் குறைத்த பொற்கைமாறன் சரிதமும் பிறவும் உய்த்துணரத்தக்கன.

அவர்கள், தங்களது தேசத்தின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதனவாகிய உழுதொழில், கைத்தொழில், பண்டமாற்றல் ஆகியவற்றை விருத்திசெய்து தேசத்தை முன்னேற்றிவந்தார்கள். இது, சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர்பெருந்தகையாராலே பாடப்பெற்றதும், பத்துப்பாட்டினுள் ஒன்பதாம் பாட்டாயதுமாகிய பட்டினப்பாலையிற் பயின்றுவரும் புகார்ப்பட்டினத்தைச் சிறப்பிக்கும் அடிகளால் இனிது விளங்கும். இதற்கு வேறுபல சான்றுகளுமுள.

அவர்கள், நீரிலே கப்பல்கள்மூலமாயும், நிலத்திலே வண்டிகள் மூலமாயும் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய பண்டமாற்றல்களால் வருகின்ற சுங்கப்பொருள்களையும், வழியற்றவர்கள், அறிவற்றவர்கள் ஆகிய இவர்களுடைய பொருள்களையும், குடிகளுடைய நிலவருவாயில் ஆறில் ஒருபங்கையும், ஓராளிற்கு மேற்பட்ட பூமியின்கீழுள்ள புதைபொருள்களையும் தங்களுடைய பொருள்களாகக் கருதிவந்தார்கள். இங்குப் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாயதும் பொய்கையாராற் பாடப்பெற்றதுமாய இன்னிலைப் பதினேழாம்பாட்டாராயத்தக்கது.

அவர்கள், 'ஒருமாநிலத்திலேவிளைந்தநெல்லை முறைப்படி அறுத்துக்கொணர்ந்து சேர்த்தால் அஃதொரு யானைக்குப் பலநாளுணவிற்காகும். அங்ஙனமின்றி அவ்யானையே நேரில் வயலிற்சென்று தின்னுமாயின் வாய்புகுவதனினுங் காலாற்கெடுவது அதிகமாகும். வண்டி

ஓட்டுவோன் நேரியவழியிற்செலுத்தாது தவறிநடப்பானுயின் அந்த வண்டி பகையாகிய சேற்றிலகப்பட்டுக் கெட்டுவிடும்' என்ற பலவகைப் பட்ட நீதிகளை நன்குணர்ந்துகொண்டு குடிகளுக்குச் சிறிதுங் கஷ்ட மின்றிக் காலத்திற்கேற்றவாறு வரிகளை வசூல்செய்து வந்தார்கள்.

அவர்கள், இவ்வாறு வரும் தங்களுடைய பொருள்களைத் தருமக் காரணமாக வறியர்முதலாயினர்க்கும், பொருள்காரணமாக நால் வகைச்சேனை, பிரிந்தார்ப்புணர்த்தல், புணர்ந்தார்ப்பிரித்தல் முதலிய வற்றிற்கும், இன்பங்காரணமாக இளமரக்கா, செய்குன்று, முதலாய வற்றிற்குமாகச் செலவிட்டு இம்மையிலனுபவிக்கவேண்டிய மூன்று புருடார்த்தங்களையுங் குறைவின்றி அனுபவித்துவந்தார்கள். இத் துணையுங் கூறியவாற்றால் நமது தலையங்கம் ஒராற்றான் விளக்கப்பெற்ற தாம்.

கும்பகோணம் } உ.வே. சா. வேங்கடராமன்,
27-12-17. } தண்டமிழ்த்தொண்டன்.

---

உ

## நாமகள் பதிகம். *

---

1. பூமிசைக்கலைகட்கெல்லாம்புகலிடமாகித்தூவெண்
பூமிசைவீற்றிருந்தும்புகழ்மிகுபாவலோர்செந்
நாமிசைநடம்புரிந்தும்ஞானிலம்விளக்கம்செய்யும்
நாமகள்நலங்கொள்பொற்றாள்நாளும்நாம்வணங்கிஉய்வாம்.

2. பொருளியல்அறியாமாந்தர்புகழ்செல்வப்பொருளினீட்டம்
மருளினைப்பயக்கும்;மற்றம்மருளறநீக்கிச்சிந்தை
தெருளுறச்செய்யும்வாணிதிருவுளத்தூற்றெடுக்கும்
அருள்பெறுபுலவனுக்கும்அரியநூற்பொருளின்செல்வி.

3. பூவினுக்கரசர்பூணும்புகழெலாமவர்தம்நாட்டுள்
மேவுறும்;ஆண்டும்அச்சீர்விரைவினில்குறைந்துமங்கும்
நாவினுக்கரசியின்கண்நல்லருள்வாய்க்கப்பெற்ற
பாவினுக்கரசர்சீரோபாரெலாம்பரவிப்பல்கும்.

4. படிக்குநல்லுயிரன்னாய்!நின்பதிதன்கைவருந்திநாளும்
தொடக்குறப்படைத்தல்செய்யுந்தொல்லுலகிருளாற்சூழும்
ஜடப்பொருட்பிண்டமன்றோ?ஸரஸ்வதி! அருட்பெருக்கில்
விடற்கருங்கலையின்சோதிவிரித்தெங்கும்விளக்கிலாயேல்,

5. தேவிபாரதிகரத்துச்சேர்ந்தொளிர்னூலும்செம்மை
மேவியயாழும்தெய்வமேனியின்எழிலும்மூன்றும்
தீவியதமிழிலென்றும்திகழியலிசைகூத்தென்னும்
மூவகைப்பாகுபாட்டைமுறைமுறைவிளக்குமன்றே.

6. செந்தமிழ்க்கடல்நீருண்டுசீரியற்புலவரென்னும்
கந்தரம்முழங்கித்தண்ணென்கவிமழைபொழியுந்தோறும்
சிந்தையுளுவந்துவந்துதிருநடம்புரியும்பைங்கட்
சுந்தரமயிலாம்வாணிதுணைமலர்ப்பாதம்போற்றி.

7. பூமகள்செருக்கிமுன்னாள்புலந்துனைப்பிரிந்தாளேனும்
ஆமவளிற்றைநாள்நீ அருளநல்லறிவுபெற்று
நாமகளே!உன்னோடுநட்புப்பாராட்டலானாள்
பூமிசையிருவீர்நட்பும்பொலிகஎந்நாளும்மாதோ.

8. கரும்பென்கோகற்கண்டென்கோகாய்ச்சியபாகென்கோயான்
விரும்பியெவ்வெவரும்வேண்டும்தேனென்கோவிண்ணோருண்
ணும், அரும்பெறலமுதேயென்கோ அன்னைபாமகள்கண்ணோக்
கின், பெரும்பயனாகஎய்தும்பேசருமின்பந்தன்னை.

[என்கோ—என்பேனோ?]

9. பொங்குநீர்க்கடல்சூழ்தந்தபுவிநிறைமாந்தரெல்லாம்
தங்களுட்பிறப்பால்பேரால்சமயபேதத்தால்மற்றும்
இங்கிவைபோல்பவற்றால்எத்துணைமுரண்பட்டாலும்
எங்கும்நாமடந்தைபொய்யாத்தெய்வமென்றேத்துகின்றார்.

10. வெள்ளுருஅணிகள்ஆடைவிளங்கவெண்முறுவல்தோன்ற
வெள்ளிதழ்மலரின்மேலோய்!வேண்டுவன்வரமொன்றுன்பால்
வெள்ளியஅறிவுள்ளோரும்வேறுளரென்போல்வாரும்
ஒள்ளியஉணர்வோடுன்தாட்குறுதொண்டுபுரிகவென்றே.

வே. முத்துஸாமிஐயன் எம். ஏ. எல். டி.

மதுரை.

---

*இப்பதிகம் 15—10—18-இல் (விஜயதசமியன்று) மதுரை ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் சங்கத்தின் விசேஷக்கூட்டத்தில், மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் ஸரஸ்வதிதேவிக்குப் புனர்பூஜை நடந்தேறியவுடன் ஆக்கியோரால் படித்துப் பொருள்கூறப்பட்டது.

# இந்துதேசசரித்திர காலக்குறிப்புகள்.

## (Chronological Notes Of Indian History)


16-ம் தொகுதி 546-ம் பக்கத்தொடர்ச்சி.

### விஜயநகர அரசர்

[முதல் வம்சாவளி]

சங்கமர்

- ஹரிஹரர் I 1336-1343 {விஜயநகர ராஜ்ய ஸ்தாபகர்}
- கம்பர் (1343—)
  - சங்கமர் II {3—5—1356 தானசாஸனம்}
- புக்கர் I ( —1376) (மனைவி-கௌரி)
  - ஹரிஹரர் II (1376-1399) {ஷை மனைவி மாலாம்பிகை}
    - புக்கர் II (1399—1406 நவம்பர்)
    - தேவராயர் I 1406—1412 (1413?) {ஷை மனைவி ஹேமாம்பிகை}
    - விரூபாக்ஷர்
- மாரப்பன்
- முத்தப்பன்




குறிப்பு:—(1) 1476—1477 ப்ரௌடதேவராயர் (யார்தெரியவில்லை) (2) மல்லிகார்ஜுனர்காலமான 1452 முதல் பரம்பரைக்ரமமும், காலக்குறிப்புகளும் சரியானபடி தெரியவில்லை.

## விஜயநகர அரசர்

[2-ம் வம்சாவளி]
திம்மர்
(மனைவி-தேவகி)

ஈசுவரர்
(மனைவி-புக்கம்மாள்)

நரசிம்ம (நரச)
(1498-ல் ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டார்)
ஷை 3 மனைவிகள்

(1) [திப்பாஜி அம்மாள்]
வீரநரசிம்மர்
(?—1509)

(2) [நாகலம்மாள்]
கிருஷ்ணதேவர்
1510—1530

(மகள்)
ஷை கணவன்
ராமராயர்

(மகள்)
ஷை கணவன்
திருமலைராயர்

1542—1565 ராஜப்ரதிநிதிகள்.

(3) [ஓபாம்பிகை]


ரங்கர்
(=திம்மாம்பாள்)

சதாசிவராயர்
1542—1567
பேருக்குராஜா
(1565 தலைக்கோட்டையுத்தம்)

அச்சுதர்
1530—1542

வெங்கடராயர்

# விஜயநகர அரசர்



[3-ம் வம்சாவளி]
ரங்கர் I
=(திருமலாம்பாள்)
அலிய ராமராயர் II
(1565-ல் யுத்தமரணம்)
ஷை மனைவி-(கிருஷ்ணதேவராயர் மகள்) திருமலாம்பாள்
1542–1565 ராஜப்ரதிநிதி
திருமலைராய் I
1565–7 ராஜப்ரதிநிதி
1567–75-ராஜா
ஷை மனைவி-(கிருஷ்ணதேவராயர் மகள்) வெங்கலம்மாள்
வெங்கடாத்ரி
(1565-ல் யுத்தமரணம்)
5-ம் ரங்கர்
கோபாலர்
4-ம் ரங்கர்
(+ 4 சகோதரர்)
ரகுநாதர்
ரங்கர் II
(1575-1584)
ராமர் III
வேங்கட I
(1586-1614)
ஸ்வீகாரபுத்ரன்
6-ம் ரங்கர்
திருமலை II
ரங்கர் III
4-ம் ராமர் வகையறா
பெத்த வெங்கடII
1634—36
=பங்காரம்மாள்
சின்ன வெங்கட III
6-ம் ரங்கர்
1644-ல் கோபாலருக்கு ஸ்வீகாரம்

## விஜயநகர அரசர்கள்

[முதல் வம்சம்]

1336—1343 ஹரிஹரர் I
—1376 புக்கர் I

[கம்பராயர் 1343—1355 சங்கமர் 1356 மே௴ 3௨]

[நெல்லூர்த்தானசாஸனம்]

1376—1399 ஹரிஹரர் II
1399—1406 (நவம்பர்) புக்கர் II
1406—1412 (1413?) தேவராஜர் I
1412 (1413?)—1419 வீரவிஜயர்
1419—1444(?) தேவராஜர் II
1444—1449 (?)
1452 (3?)—1464 (5?) மல்லிகார்ஜுனர்
1468—1469 ராஜசேகரர்
1470—1471 விருபாக்ஷர்
1476—1477 ப்ரௌட தேவராயர்
1479—1480 ராஜசேகரர்
1483—1484 விருபாக்ஷர் II
1486—1487 ராஜசேகரர்

[இரண்டாம் வம்சம்]

1490 நரசிம்மன்
?—நரச (வீரநரசிம்மன்)
1509—1530 கிருஷ்ணதேவராயர்
1530—1542 அச்யுதராயர்
1542—1567 சதாசிவராயர்
(ஆயுள் அளவும் கைதியாக இருந்தார்)

[மூன்றாம் வம்சம்]

1542—1565 ராமராஜ்
1565—1567 திருமலேராயர்
} சதாசிவரின் ப்ரதிநிதியாய் ஆண்டார்கள்.

1567—1575 ஷ டி திருமலைராயர், ராஜ்யத்தை ஸ்வாதீன மாய் அடைந்து அரசனாய் ஆண்டார்.

1575—1586 ரெங்கராயர் II

1586—1614 வெங்கடராயர் I

[ஸூவல்]

1565 தலைக்கோட்டை யுத்தம். விஜயநகரத்தரசன் மஹம தியரால் தோல்வியடைந்தார். இத்துடன் விஜயநக ரும் பாழாயிற்று. இதுவரை மஹோந்நத தசையிலி ருந்து மஹமதியரைத் தெற்கே வராது தடுத்து தென் னிந்தியா முழுமையும் ஏக சக்ரமாய் ஆண்டுவந்த விஜயநகர் ராஜ்யமஹிமையும் போய்விட்டது. தெற்கே யுள்ள (விஜயநகரராஜ்யச்) சிற்றரசர்கள் எல்லோரும் சிலவருஷங்களுக்குள் ஸ்வாதீனர்களாகிப் பின்பு, மஹ மதியரசுக்குச் சிற்றரசர்களானார்கள்.

1565 வங்காள அரசன் ஸூலோமான், ஒரிஸாவை ஜயித்து, வங்காளத்துடன் சேர்த்துக்கொண்டான்.

1571-1576. சாமராஜ உடையார். விஜயநகர் ஆதீனத்தினின்றும் விலகித் தன்மைசூர் ராஜ்யத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டார்.

1570 திருநெல்வேலி ஜில்லாக் கடல்ப்ரதேசங்களில் பஞ்சம்.

[Portugese Records.]

1574. துளஸீதாஸ். ஹிந்திபாஷையில் ராமாயணமியற்ற ஆரம்பித்தார்.

1577. வீரபத்ரன். பந்தல்லா (Bundella.) நாட்டுச்சிற்றரசன். ப்ரத்யோதர். வீரபத்ரன் வருதிப்படி ஜயதேவர் இயற் றிய சந்திராலோகம் என்ற நூலுக்கு உரை எழுதினார்.

1578. (சகம் 1500) சிலைலிபி. மதுரை (திருமலைநாயக்கன்) மண்டபக்கல்தூணில் உள்ளது. திருமலைநாயக்கன் முன்னோரான பெரியவீரப்பனால் கட்டப்பட்டதாய் இதில் எழுதியிருக்கிறது.

1585-1614. வெங்கடபதி. விஜயநகர ராஜவம்சத்தரசன். விஜயநகரினின்றும் சந்திரகிரிக்குத் தலைநகர் இவர்காலத்தில் மாற்றப்பட்டது.

அப்பயதீக்ஷிதர் தன் அபிமானியான வெங்கடபதியரசன் வருதிப்படி குவலயாநந்தம் எழுதினர்.

1586 வரதுங்கராமபாண்டியன் பராக்ரமபாண்டியனுடைய 2-ம் குமாரன்.

—[குவலயாநந்தம்.]

1589 தோடர்மால் மரணம் அக்பர் ஸமஸ்தானத்திலிருந்த கஜானு மந்திரி இவர். ஹிந்து வங்காள ராஜப்ரதிநிதியாகவும் ஆண்டார்.

1590 நாராயணபட்டபாதர் ஸ்வாஹாஸுதாகரம் என்ற காவ்யம் இயற்றியவர். கேரளதேசத்தில் மேப்புன்னூரில் பிறந்தவர்.

கிருஷ்ணகவி ஷையார் குமாரர். தாராசசாங்க காவ்யம் இயற்றியவர்.

1592 ஒரிஸாவில் ஆண்டகடைசி ஹிந்து அரசன் மஹமதியரால் தோல்வியடைந்தான்.

1595-1602 லிங்கயநாயக்கர் மதுரை நாயக்கர்வம்ச 4-ம் அரசன்.

1596-7 அபுல் பேஸல் 'ஐனி அக்பரி,' 'அக்பர்நாமா' என்ற நூல்களை எழுதிமுடித்தார். இவர் அக்பர் ஸமஸ்தான சரித்திர ஆசிரியர் – 1602-ல் பந்தல்லாத்திருடனால் கொலையுண்டார்.

—[1906 I. R. 421]

1597 விஜயநகர ஸமஸ்தானத்துக்குட்பட்ட நாடுகள்:—

| | நாடுகள். | தலைவர். |
|---|---|---|
| (1) | ஜெஞ்ஜி | கிருஷ்ணப்பநாயக்கன். |
| (2) | தஞ்சை | ? நாயக்கன். |
| (3) | மதுரை | குமாரகிருஷ்ணப்ப நாயக்கர். |

(4) சென்னபட்டணம் ஜகதேவராயர்.
(5) ஸ்ரீரெங்கபட்டணம் திருமலைராயர்.
(6) பெண்ணகொண்டா ?

—[Mackenzi]

1597 [சகம் 1521] சுந்தரமிச்ரர், 'அபிராமாமணி' என்ற (7-அங்க) நாடகம் இயற்றினார்.

1600-11-1 சீமையில், ஈஸ்ட் இந்தியா கம்பனியாருக்கு, எலிஸபத் மஹாராணியார் வியாபாரப்பட்டயம் அளித்தார்கள்.

160-1609 முத்துகிருஷ்ணப்பநாயக்கர் மதுரை நாயக்கர் வம்ச 5-ம் அரசன்.

1605-1627 ஜஹாங்கீர் தில்லியிலாண்ட முதல் சக்ரவர்த்தி.

1606 ராபர்ட்-டி-நிகோலஸ் வரவு.

1608 துகாராம் ஜனனம் - பிறப்பிடம் புனாவுக்கடுத்த இந்திராயணி நதிக்கரையிலுள்ள தேகு என்ற கிராமம்.
1649-முதல் இவர் இருப்பிடம் தெரியவில்லை.

இவர் சிறந்தமஹாராஷ்ட்ர பாகவதர். விடோபருடன் ஐக்கிமாய் விட்டதாயும் சொல்லுவதுண்டு.

1643-ல் சிவாஜி மஹாராஜாவைப்பற்றிக் கவிபாடி இருக்கிறார்.

[1649-ஐ பார்க்கவும்.]

1608 [சகம் 1530=கீலக-சைத்ர, சுக்ல-நவமி ஞாயிறு] ஸ்ரீ ராமநவமி தினத்தில் ராமதாஸ் ஜனனம்.
இவர் ஆதிப்பெயர்—நாராயணர்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
மதுரை பி. ஏ., பி. எல்.

---

பிழைதிருத்தம்

எங்கிலாந்தர்வெற்றியும் இந்தியர்மேன்மையும்

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 1 | வெண்சுடர் | வொண்சுடர் |
| ,, | 13 | மக்கணன் | மக்கணண் |
| 2 | 4 | மரிந்தனவே | மிரிந்தனவே |
| 4 | 5 | றெழிற்றுரை | றெழிற்றுறை |

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்,
கிருஸ்டியன்காலேஜ், சென்னை.